நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ஆடிப் பட்டத்தில் அமோக லாபம்: வேளாண் துறை யோசனை**

அதிக விலை கிடைக்கக் கூடிய வேளாண் பொருள்களை ஆடிப் பட்டத்தில் விதைப்பு செய்து லாபம் ஈட்டுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து வேளாண் துணை இயக்குநர் எம்.சண்முகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஆடிப் பட்ட விதைப்பு தென்மேற்குப் பருவமழையையொட்டி அமைகிறது. ஆடிப் பட்டத்தில் விதைக்கப்படும் பல்வேறு பயிர்கள் அறுவடை செய்யப்படும்போது என்ன விலைக்கு விற்பனை ஆகும்?, லாபகரமாக இருக்குமா? என்று விவசாயிகள் எண்ணிப் பார்த்து விதைப்பு முடிவுகளை எடுப்பது அவசியம்.

அத்தகைய சிறப்பான முடிவுகளை எடுக்கும் வண்ணம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் ஆடிப் பட்டத்தில் முக்கிய பயிர்களான வேர்க்கடலை, எள், மக்காச்சோளம், சின்னவெங்காயம் ஆகிய பயிர்களுக்கு விலை முன்னறிவிப்புகளை செய்துள்ளது.

மக்காச்சோளம் வரத்து குறைவினாலும், கோழிப்பண்ணைகளின் தேவை அதிகரிப்பு ஆகியவற்றால் இதன் விலை ஏறுமுகத்தில் உள்ளது.

பண்ணை விலை குவிண்டாலுக்கு ரூ.1500-க்கு மேல் உயர்ந்துள்ளது. உள்ளூர் விநியோக விலை குவிண்டாலுக்கு ரூ.1550 அதிகமாக உயர்ந்துள்ளது. வெள்ளை எள், ஏற்றுமதி மற்றும் அடுமனை தயாரிப்புப் பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது.

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் 13 ஆண்டு விலைகளை ஆய்வு செய்ததில் அறுவடையின்போது சிவப்பு எள்ளின் விலை செப்டம்பர் முதல் டிசம்பர் வரை கிலோ ஒன்றுக்கு ரூ.72 முதல் 76 வரை இருக்கும். விவசாயிகள் இந்த விலையை கணக்கிட்டு விதைப்பு செய்து பயன்பெறலாம்.

**"தழைச்சத்து உரங்களை கூடுதலாகப் பயன்படுத்தாதீர்'**

தழைச்சத்து உரங்களை கூடுதலாகப் பயன்படுத்தினால் பயிர்களை பூச்சிநோய் தாக்க வாய்ப்பு ஏற்படும் என விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது.

கடலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எம்.ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழக அரசு உரங்களின் மீதான 4 சதவீத மதிப்புக் கூட்டு வரியில் இருந்து விலக்கு அளித்து உள்ளது. இதன் மூலம் 50 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூ.11 முதல் ரூ.52 வரை குறைந்துள்ளது.

விவசாயிகள் யூரியா உரத்தையும், யூரியா போன்று தழைச்சத்தை அளிக்கக்கூடிய உரங்களையும் பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அதிக அளவில் வாங்கி பயன்படுத்தினால் பயிர்களின் வளர்ச்சி

அதிகரித்து, பூச்சிநோய் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும். இதன் மூலம் மகசூல் குறைய வாய்ப்பு உள்ளது.

எனவே விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேட்டில் உள்ள மண்வள பரிசோதனையின் அடிப்படையில் அல்லது பொது பரிந்துரையின்பேரில் உரங்களை இட வேண்டும். யூரியாவுடன் மணி மற்றும் சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களையும் தவறாமல் பயன்படுத்துங்கள்.

மேலும் விவசாயிகளிடையே சிறிய அளவிலான யூரியா உரங்கள் அதிக பலனை தரக்கூடியது என்ற தவறான எண்ணம் நிலவி வருகிறது.

குருணை வடிவிலான யூரியா மற்றும் சிறிய அளவிலான யூரியா இவை இரண்டிலும் தழைச்சத்து 46 சதவீதம்தான் உள்ளது. எனவே எந்த வடிவில் இருந்தாலும் எவ்வித சந்தேகமும் இல்லாமல் யூரியா உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவில் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் டிஏபி உரம் போதிய அளவில் இருப்பில் உள்ளது. மேலும் உரங்களை வாங்கும்போது ரசீதை தவறாமல் கேட்டுப் பெறவும், மூட்டையில் உள்ள விற்பனை விலையை சரிபார்த்தும் வாங்க வேண்டும்.

**"நிலையான மகசூலுக்கு உயிர் உரங்கள் அவசியம்'**

விவசாயிகள் நிலையான மகசூல் பெற வேண்டுமானால் உயிர் உரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று வேளாண்மை இணை இயக்குநர் செப்ந்தரராஜன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியது:

தொழுஉரம் இடுதல், தக்கைபூண்டு, சணப்பு போன்ற பசுந்தாள் பயிர்கள் சாகுபடி செய்து நிலத்திலேயே மடக்கி உழுதல், பசுந்தழைகளை நிலத்தில் இடுதல் ஆகியன தொடர்ந்து கடைப்பிடிக்கும் ஒருவழியாகும். உயர் உர உற்பத்தி மையங்களில் உற்பத்தியாகும் பயிருக்கேற்ற சத்துக்களை வழங்கும் உயிர் உரங்களை இடுவது ரசாயன உரங்களுக்கு ஓரளவு மாற்று வழியாகும். இந்த உயிர் உரங்கள் யூரியா, சூப்பர்பாஸ்பேட், போன்ற ரசாயன உரங்கள் அளிக்கும் பயன்களை தரவல்லது.

அசோஸ்பைரில்லம், அசிட்டோபாக்டா, ரைசோபியம், நீளபச்சை பாசி, அப்ஸாலா இடுவதால் யூரியா உரத்தால் கிடைக்கும் தழைச்சத்தும் பாஸ்போபாக்டிரியா உயிர் உரம் இடுவதால் சூப்பர்பாஸ்பேட், டி.ஏ.பி. உரத்தால் கிடைக்கும் மணிச்சத்தும் இயற்கையாகவே நிலத்துக்கும் பயிருக்கும் கிடைக்கும். இதனால் மண்ணில் ரசாயனத் தன்மை குறைந்து அங்கத்தன்மை கூடும். அது மண்ணின் உயிர்தன்மையை தூண்டி மண்வளத்தைப் பாதுகாத்து, உரச்செலவையும், பூச்சிநோய் பாதிப்பையும் குறைத்து பயிர்வளர்ச்சியையும் மகசூலையும் அதிகரிக்கச் செய்கிறது.

இந்த உயர் உரங்களை விதையுடன் கலந்து விதைநேர்த்தி செய்தல், நெல் நாற்றின் வேர்களை நனைத்தல், தொழுஉரத்துடன் கலந்து நிலத்தில் நேரடியாக இடுதல் போன்ற முறைகளில் நிலத்தில் இடலாம்.

விலையோ மிகவும் குறைவு. ஒரு பாக்கெட் விலை ரூ. 6 மட்டுமே. இது 50 சதவீத மானியத்தில் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் வழங்கப்படுகிறது.

மேலும் தகவலுக்கு வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், உழவர் பயிர்சி நிலையம், பஞ்சுப்பேட்டை, காஞ்சிபுரம் என்ற முகவரியிலோ அல்லது 044 - 2722 3043 என்ற அலுவலக தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்றார் அவர்.

**பெண் விவசாயிகளுக்கு நெல் விதை வழங்கும் விழா**

உளுந்தூர்பேட்டை ஸ்ரீசாரதா ஆஸ்ரமத்தின் சார்பில் விவேகானந்தரின் 150-வது ஜெயந்தியை முன்னிட்டு பெண் விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் விதை வழங்கும் விழா புதன்கிழமை நடைபெற்றது.

அக்ஷய க்ருஷி கேந்திரா இயக்குநர் யதீஸ்வரி ஆத்மவிகாஸப்ரிய அம்பா வரவேற்றார். ஸ்ரீசாரதா ஆஸ்ரம தலைமை மாதாஜி ராமகிருஷ்ணப்ரிய அம்பா ஆசியுரை வழங்கினார். ராமகிருஷ்ணா ஆஸ்ரம தலைவர் சுவாமி அனந்தானந்தஜி மகராஜ் சிறப்புரையாற்றினார். இலங்கை ராமகிருஷ்ணா மிஷன் செயலாளர் சுவாமி சர்வரூபானந்தஜி மகராஜ் ஆசியுரை வழங்கி, 1000 பெண் விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் விதைகளை வழங்கினார்.

1000-த்திற்கும் மேற்பட்ட பெண் விவசாயிகள், சந்நியாச சகோதரிகள் பலர் கலந்துகொண்டனர்.

**வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடக் கோரி விவசாயிகள் மறியல்**

வைகை அணையில் இருந்து பாசனத்துக்குத் தண்ணீர் திறந்துவிடக் கோரி, மதுரையில் பொதுப்பணித் துறை அலுவலகத்தை விவசாயிகள் வியாழக்கிழமை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து, அவர்கள் சாலை மறியலிலும் ஈடுபட்டனர்.

பெரியாறு - வைகை பாசனத் திட்டத்தில் மதுரை மாவட்டத்தில் இருபோக சாகுபடி பகுதிகளில் முதல் போகத்துக்கு ஆண்டுதோறும் ஜூன் 1 ஆம் தேதி தண்ணீர் திறப்பது வழக்கம்.

பெரியாறு மற்றும் வைகை அணைகளில் மொத்த நீர் இருப்பு 4 ஆயிரம் மில்லியன் கன அடியைத் தாண்டும்போது தண்ணீர் திறக்கப்படும்.

இதன் மூலம் வாடிப்பட்டி, மதுரை வடக்கு ஆகிய தாலுகாக்களைச் சேர்ந்த 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் முதல்போகத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படவில்லை. இந்த ஆண்டும் அணையிலிருந்து தண்ணீர் திறப்பது தாமதம் ஆகிறது.

தற்போது அணைகளில் மொத்த நீர் இருப்பு 4 ஆயிரம் மில்லியன் கன அடியைத் தாண்டிய நிலையில், கடந்த இரு வாரங்களுக்கு முன்பு பொதுப்பணி, வேளாண் துறையினர், விவசாயிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஜூலை 10 ஆம் தேதி தண்ணீர் திறப்பதற்கான கருத்துருவை அரசுக்கு அனுப்புவது என முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையில், தண்ணீர் திறக்க தாமதம் ஆகி வருதையடுத்து, இருபோக பாசனப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பொதுப்பணித் துறை அலுவலகம் முன் முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

பின்னர், பொதுப் பணித் துறை (நீர்வள ஆதார அமைப்பு) தலைமைப் பொறியாளர் இ. தமிழரசன், கண்காணிப்புப் பொறியாளர் ராஜேஷ், செயற்பொறியாளர் ப.தனபாலன், மதுரை தெற்கு வட்டாட்சியர் கங்காதரன் ஆகியோர் விவசாயிகளை அழைத்துப் பேசினர்.

அப்போது, ஜூலை 15-லிருந்து ஜூலை 22 ஆம் தேதிக்குள் தண்ணீர் திறந்துவிட கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஓரிரு நாள்களில் அறிவிப்பு வந்துவிடும் என்று தலைமைப் பொறியாளர் தெரிவித்தார். விவசாயிகள் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

முதல்போக சாகுபடி இதுவரை பொய்த்துப் போனதாக வரலாறு கிடையாது. ஆனால், கடந்த ஆண்டு முதல் போகத்துக்கு தண்ணீர் திறந்துவிட வலியுறுத்தியபோதும் மறுத்துவிட்டனர். ஆனால், இருபோகப் பகுதிக்கு 19 நாள்கள் தண்ணீர் திறந்துவிடப்பட்டு, பயன் இல்லாமல் போனது. 4 ஆயிரம் மில்லியன் கன அடி நீர் இருப்பு வந்தவுடன் தண்ணீர் திறக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

ஜூன் 27 ஆம் தேதியே 4 ஆயிரம் கன அடியைத் தாண்டிய நிலையில், தாமதம் செய்து வருவது பொதுப்பணித் துறையினர் அலட்சியத்தையே காட்டுகிறது என்று விவசாயிகள் சங்கத் தலைவர் புத்திசிகாமணி தெரிவித்தார். காலம் கடந்து தண்ணீர் திறந்து விடுவதால் அறுவடை பாதிக்கும் என்றும் அவர் கூறினார்.

உயர் நீதிமன்ற உத்தரவை நமது அதிகாரிகளே செயல்படுத்தாத நிலையில், கர்நாடகத்தையோ, கேரளத்தையோ நாம் குறைகூறுவதில் நியாயம் இல்லை. ஜூலை 10 ஆம் தேதி தண்ணீர் திறக்க கருத்துரு அனுப்புவதாகக் கூறிவிட்டு, தற்போது 15 ஆம் தேதியில் இருந்து 22 ஆம் தேதிக்குள் திறக்க கருத்துரு அனுப்பியிருப்பது விவசாயிகளை ஏமாற்றும் செயல். ஆகவே, இனியும் தாமதிக்காமல் ஜூலை 15 ஆம் தேதி திறக்க வேண்டும், அதன் பிறகு என்றால் தண்ணீர் திறக்கவே வேண்டாம் என்று கள்ளந்திரி பகுதி நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் அருள்பிரகாசம் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து விவசாயிகள் பலரும் உடனடியாக தேதியை அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினர். ஆனால், அரசுதான் தேதியை அறிவிக்கும் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதில் அதிருப்தி அடைந்த விவசாயிகள் கூட்டத்தில் இருந்து வெளியேறி, பொதுப்பணித் துறை அலுவலகம் எதிரே சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் அப் பகுதியில் சற்றுநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

அதையடுத்து, அங்குவந்த மதுரை வருவாய் கோட்டாட்சியர் எஸ்.ஆறுமுகம், விவசாயிகளிடம் பேச்சு நடத்தினார். ஜூலை 15 ஆம் தேதி தண்ணீர் திறப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக மாவட்ட ஆட்சியர் உறுதி அளித்துள்ளார் என்று தெரிவித்தார்.

அதையடுத்து, விவசாயிகள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

**கிராம தங்கல் திட்டத்தின் கீழ் தென்னை மர விவசாயிகளுக்குப் பயிற்சி**

பெரியகுளம் அருகே குள்ளப்புரத்தில் உள்ள வேளாண்மைத் தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள், மேல்மங்கலம் கிராமத்தில் உள்ள தென்னை மர விவசாயிகளுக்கு வியாழக்கிழமை செயல்முறை விளக்கப் பயிற்சி அளித்தனர்.

இக் கல்லூரி மாணவிகள், கிராம தங்கல் திட்டத்தின் கீழ் மேல்மங்கலம் கிராமத்திலுள்ள தென்னை மர விவசாயிகளுக்கு செய்முறை விளக்கப் பயிற்சி அளித்தனர். அப்போது, தென்னை மரத்துக்கு வேர்மூலம் ஊட்டச்சத்து அளிப்பது குறித்தும், தென்னை மரத்தை பரவலாகத் தாக்கக்கூடிய சிவப்பு கூண்வண்டு மற்றும் காண்டாமிருக வண்டு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான இனக் கவர்ச்சிப் பொறியை உபயோகிக்கும் முறை குறித்தும் பயிற்சி அளித்தனர்.

பெரியகுளம் வேளாண்மை உதவி அலுவலர்கள் மேற்பார்வையில் நடைபெற்ற இப் பயிற்சியில், 120 தென்னை மர விவசாயிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு முகாம்**

முன்னோர்கள் ஏற்படுத்திக் கொடுத்த நீர் ஆதாரங்களை முறையாக பராமரித்து, அவற்றை வருங்கால சந்ததியினரும் பயன்படுத்தும் வகையில் பாதுகாக்க வேண்டும் என சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் கேட்டுக் கொண்டார்.

ஆட்சியர் அலுவலகத்தில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் பேசியதாவது:

கோவில், குளங்களை உருவாக்கி அதன் மூலம் நீர் ஆதாரம் பெருக முன்னோர்கள் வழிவகை செய்துள்ளனர். இந்த ஆதாரங்களை முறையாகப் பராமரித்து அவற்றை வருங்கால சந்ததியினருக்கும் பயன்தரும் வகையில் நாம் செயல்பட வேணடும்.

புதிய கட்டடங்கள் கட்டப்படும் போது அதில் மழைநீர் சேகரிப்பு அவசியம் இருக்க வேண்டும், மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் பண்ணைக் குட்டைகளை பயன்படுத்தி, விவசாயத்துக்கான நீர் ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

**விஞ்ஞானிகளுடன் இணைந்து விவசாயிகள் செயல்பட வேண்டும்**

விவசாயத்தில் எதிர்பார்க்கும் உற்பத்தியைப் பெற விஞ்ஞானிகளுடன் இணைந்து விவசாயிகள் செயல்பட வேண்டும் என்று, தமிழக வேளாண் துறை அமைச்சர் செ.தாமோதரன் பேசினார்.

கோவை கொடிசியா சார்பில், 13வது அக்ரி இன்டெக்ஸ் 2013 வேளாண்மைக் கண்காட்சி, கொடிசியா அரங்கில் வியாழக்கிழமை தொடங்கியது.

இக் கண்காட்சியைத் தொடங்கி வைத்து வேளாண் துறை அமைச்சர் செ.தாமோதரன் பேசியது:சர்வதேச அளவில் இன்று இயந்திரங்களின் தேவை அனைத்து துறைகளுக்கும் அத்தியாவசியமாகிவிட்டது. இயந்திரங்கள் இல்லாமல் எந்த வேலைகளும் செய்ய முடியாது என்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தியா சுதந்திரம் பெற்ற போது அப்போதைய மக்கள் தொகை 30 கோடி; மக்கள் தொகை இப்போது 120 கோடியை எட்டி விட்டது. ஆனால் விளைநிலங்கள் முன்னிருந்ததை விட

சுருங்கிவிட்டன. இதிலும் விவசாயம் செய்ய தற்போது ஆள்கள் கிடைப்பதில்லை. இப் பிரச்னையை சமாளிக்க இயந்திரங்களின் பயன்பாடு முக்கிய தேவையாக உள்ளது.

பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவுப் பொருள்கள் உற்பத்தி இருக்க வேண்டும். விவசாய உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளின் தேவைகளை அறிந்து அரசு செயல்பட வேண்டும்.

விவசாயிகளின் தேவையறிந்து தொழில்நுட்பக் கருவிகளை கண்டுபிடிப்பதும் முக்கியமான ஒன்று. அதே போல் விவசாயிகளும் தொழில்நுடபம் அறிந்து விவசாயம் செய்வது முக்கியம்.

தவிர விஞ்ஞானிகளுடன் இணைந்து விவசாயிகள் செயல்பட வேண்டும். அப்போதுதான் விவசாயத்தில் எதிர்பார்க்கும் உற்பத்தியைப் பெருக்க முடியும். விஞ்ஞானிகளும் நமது நாட்டில் விவசாயத்துக்கு என்ன கருவிகள் தேவை என்பதையறிந்து உருவாக்க வேண்டும். மேலை நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பல விவசாயக் கருவிகள் நமது நிலங்களுக்கு உகந்தவையாக இல்லாமல் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது என்றார்.

வேளாண் துறையின் உற்பத்தி ஆணையர் சந்தீப் சக்சேனா: இன்றைய சூழலில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் கொஞ்சமல்ல. அதில் முக்கியமான ஒன்று ஆள்கள் பற்றாக்குறை. இது போன்ற பிரச்னைகளை சமாளித்து விவசாய உற்பத்தியைப் பெருக்கத் தேவையான சிறிய ரக விவசாயக் கருவிகள், இயந்திரங்களை கண்டுபிடித்து வழங்குவது அவசியம் என்றார்.

கோவை மாநகராட்சி மேயர் செ.ம.வேலுசாமி, வேளாண்மைத் துறை இயக்குநர் எம்.ராஜேந்திரன், தோட்டப் பயிர் மற்றும் தோட்டக்கலைத் துறை ஆணையர் சத்யபிரதா சாஹு, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக விழா மலர் வெளியிடப்பட்டது. கண்காட்சியில் 225 அரங்குகள் வரை அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் விவசாயிகளுக்குத் தேவையான புதிய வகை திட்டங்கள், புதிய வகை விவசாயக் கருவிகள், இயந்திரங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இக் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை நிறைவடைகிறது.

**கூட்டுறவு தேயிலை ஆலைகளுக்கு மின்னணு தராசு: எம்எல்ஏ தகவல்**

தேயிலை விவசாயிகளின் நலன் கருதி அனைத்து கூட்டுறவு தேயிலை ஆலைகளிலும் நவீன மின்னணு தராசுகள் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, உதகை சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் புத்திசந்திரன் தெரிவித்தார்.

குந்தா கூட்டுறவுத் தேயிலை ஆலையின் 10 சதவீத லாப பங்குத் தொகையை விவசாயிகளுக்கு வழங்குதல், பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த விவசாய அங்கத்தினர்களின் குழந்தைகளுக்கு பரிசளிப்பு உள்ளிட்டவை, குந்தா கூட்டுறவு தேயிலை ஆலை வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

குந்தா கூட்டுறவு தேயிலை ஆலை தலைவர் சகாதேவன் தலைமை வகித்தார். இண்ட்கோ சர்வ் தலைவர் பி.பி.சிவகுமார், இண்ட்கோ சர்வ் இணை இயக்குநர் சாமிநாதன், பிக்கட்டி பேரூராட்சித் தலைவர் ஜெயமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணைத் தலைவர் டி.பி.போஸ் வரவேற்றார்.

இதில் பங்கேற்று புத்திசந்திரன் எம்எல்ஏ பேசியது: எடக்காடு கூட்டுறவுத் தேயிலை ஆலைக்கு விவசாயிகள் அதிகளவு பசுந்தேயிலை விநியோகம் செய்து வருகின்றனர்.

மே மாதம் மட்டும் இந்த ஆலையில் 2 லட்சம் கிலோ பசுந்தேயிலையை விவசாயிகள் விநியோகித்துள்ளனர்.

எடக்காடு சுற்று வட்டாரப் பகுதிகளில் அதிகளவு பசுந்தேயிலை உற்பத்தி செய்யப்படுவதால், விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான புது அட்டுபாயில் பகுதியில் புதிய கூட்டுறவு தேயிலை ஆலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் அனைத்து கூட்டுறவு தேயிலை ஆலைகளிலும் 2 மாதத்தில் நவீன மின்னணு தராசு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். இதனால் விவசாயிகள் விநியோகிக்கும் பசுந்தேயிலை துல்லியமாகக் கணக்கிடப்படும் என்றார்.

குந்தா கூட்டுறவு தேயிலை ஆலை இயக்குநர்கள் தர்மராஜ், நாகராஜ் உள்பட 100-க்கும் மேற்பட்ட விவசாய அங்கத்தினர்கள் பங்கேற்றனர்.

**நீலகிரியில் தொடரும் கன மழை**

நீலகிரி மாவட்டத்தில் தொடரும் கனமழையால் கடும் குளிர் நிலவுவதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் புதன்கிழமை பெய்த பலத்த மழை, தமிழக வானிலை ஆய்வு மையத்தால் நீலகிரி மாவட்டத்துக்கு கனமழை எச்சரிக்கை உள்ளிட்ட காரணங்களால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்துப் பள்ளி, கல்லூரிகளுக்கு வியாழக்கிழமை ஒருநாள் விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், எதிர்ப்பார்த்த அளவுக்கு மழைப்பொழிவு இல்லாமல் இயல்பான காலநிலையே நீடித்தது.

இந்நிலையில் வியாழக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 311 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

அதிகபட்சமாக அப்பர்பவானியில் 55 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தின் பிற பகுதிகளில் பதிவான மழை விவரம் (மி.மீ.):

நடுவட்டம்-52, கிளன்மார்கன்-27, அவலாஞ்சி, தேவாலா-26, உதகை, கூடலூர்-22, கேத்தி-17, எமரால்டு-13, குந்தா-12, பர்லியார்-9, கெத்தை-8, குன்னூர்-7.2, கோத்தகிரி-5.6, கொடநாடு-4, கல்லட்டி-3, கிண்ணக்கொரை-2.

பலத்த காற்றின் காரணமாக பல்வேறு பகுதிகளில் மின் விநியோகமும், மின் இணைப்பும் இல்லாததால் குடிநீர் விநியோகம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

**தொடர்கிறது மழை**
வேலூர் மாவட்டத்தில் வியாழக்கிழமையும் மழை பெய்தது. வேலூர் மாநகரில் புதன்கிழமை பெய்யத் தொடங்கிய மழை அதிகாலையில் நின்றது. பின்னர் வியாழக்கிழமை பிற்பகலில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது.

இதனால், பகலில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்பட்டதை அடுத்து வழக்கமான வெப்பம் காணப்படவில்லை.

மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு (மீ.மீட்டரில்):

வேலூர் 22.6, அரக்கோணம் 14.2, சோளிங்கர் 21, காவேரிப்பாக்கம் 29.4, வாலாஜாபேட்டை 10.6, காட்பாடி 55, குடியாத்தம் 1.4, ஆம்பூர் 7.3, திருப்பத்தூர் 5.

**துவரை சாகுபடியை ஊக்குவிக்க மானிய விலையில் விதைகள் விநியோகம்**
தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயறு வகை சாகுபடியை ஊக்குவிக்க, பேர்ணாம்பட்டு வட்டாரத்தில் சுமார் 500 ஹெக்டேர் பரப்பில் துவரை சாகுபடி செய்ய மானிய விலையில் விதைகள் விநியோகிக்கும் பணி புதன்கிழமை தொடங்கியது.

பேர்ணாம்பட்டு வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, ஒன்றியக் குழுத் தலைவர் பொகளூர் டி. பிரபாகரன் தலைமை வகித்தார். விவசாயிகளுக்கு விதைகளை வேளாண்மை உதவி இயக்குநர் ஈ. ராஜேஸ்வரி வழங்கினார் . பின்னர் பயன் தரும் பயிறு திட்டம் என்ற தலைப்பில் துவரை சாகுபடி செய்வது குறித்து அவர் விளக்கம் அளித்தார்.

எல்.ஆர்.ஜி. 41 வகை துவரை விதைகள் 50 சதவீத மானியத்திலும், நுண்ணுயிர், நுண்ணூட்டச் சத்து உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் மானிய விலையில் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வட்டார வேளாண்மை அலுவலர் பி. சுஜாதா, துணை வேளாண்மை அலுவலர் எச்.ஆர். மணி, உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜேந்திரன், சங்கர், வேல்முருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**நாமக்கல்லில் ரூ.30 லட்சத்துக்கு பருத்தி ஏலம்நாமக்கல்**
நாமக்கல் வேளாண் கூட்டுறவு விற்பனை நிலையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்துக்கு 1300 மூட்டைகள் வரப்பெற்று, ரூ.30 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

வாரம்தோறும் வியாழக்கிழமை நடைபெறும் இந்த பருத்தி ஏலச் சந்தைக்கு நாமக்கல் மட்டுமன்றி, சேலம், துறையூர், தொட்டியம் உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்தும் விவசாயிகள் பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வருவர்.

அதன்படி, இந்த வாரம் வியாழக்கிழமை (ஜூலை 11) நடைபெற்ற ஏலத்துக்கு சுமார் 1300 பருத்தி மூட்டைகள் வரப்பெற்றன.

அவற்றில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4,900 முதல் ரூ.5,386 வரையும், சுரபி ரகம் ரூ.5,950 முதல் ரூ.6,700 வரையும் ஏலம் போனது. ரூ.30 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றதாக கூட்டுறவு விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

இதேபோல, கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்துக்கு 1000 மூட்டைகள் பருத்தி வரப்பெற்றதில், ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4,800 முதல் ரூ.5,351 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.4,850 முதல் ரூ.5,500 வரையும், சுரபி ரகம் ரூ.5,500 முதல் ரூ.6,035 வரையும் விலை போனது. ரூ.18 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

**நடமாடும் மண் பரிசோதனை ஊர்தி: திருச்செங்கோட்டில் அறிமுகம்**

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, திருச்செங்கோட்டில் நடமாடும் மண் பரிசோதனை ஊர்தி சேவை அளிக்கப்படுகிறது.

இதுகுறித்து திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குநர் நமச்சிவாயம் கூறியது:

திருச்செங்கோடு உழவர் சந்தையில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை நடமாடும் மண் பரிசோதனை ஊர்தி மூலம் மண் பரிசோதனை, நீர் பரிசோதனை செய்யப்படுகிறது.

காலை 10 முதல் மாலை 6 மணி வரை விவசாயிகளிடம் நேரிடையாக மண், நீர் மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் வழங்கப்படுகின்றன.

மண் மாதிரி பேரூட்டம், நுண்ணூட்டச் சத்துக்கள் குறித்த ஆய்வுக்கு கட்டணமாக ரூ.20 வசூலிக்கப்படுகிறது. நீர் மாதிரிக்கு ரூ.20 ஆய்வுக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

விவசாயிகள் தங்களது முகவரி, சர்வே எண், பயிர் சுழற்சி, சாகுபடி செய்யும் பயிர் பாசன விவரம் ஆகியவற்றை தெரிவிக்க வேண்டும் என்றார் அவர்.

**200 கிலோ போலி தேயிலை, 500 கிலோ புகையிலைப் பொருள்கள் பறிமுதல்**

சேலம் அருகே பதுக்கி வைக்கப்பட்டிருந்த 200 கிலோ போலி தேயிலைத் தூள், 500 கிலோ புகையிலைப் பொருள்களை உணவுப் பாதுகாப்பு அதிகாரிகள் வியாழக்கிழமை பறிமுதல் செய்தனர்.

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கடையாம்பட்டி அருகே உள்ள பாபிசெட்டிப்பட்டி பகுதியில் கிட்டங்கியிலும், ஏலத்தூர் பகுதியில் உள்ள ஒரு வீட்டிலும் போலி தேயிலைத் தூள் பதுக்கி வைத்து விற்பனை செய்யப்படுவதாக உணவுப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, உணவுப் பாதுகாப்பு நியமன அலுவலர் மருத்துவர் அனுராதா தலைமையில் அதிகாரிகள் வியாழக்கிழமை இரு இடங்களில் சோதனை நடத்தினர்.

அப்போது, பாபிசெட்டிப்பட்டியில் அறிவழகனுக்குச் (38) சொந்தமான கிட்டங்கியிலும், ஏலத்தூரில் மாதேஷின் (35) வீட்டிலும் தேயிலைத் தூள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக கைப்பற்றப்பட்ட தேயிலைத் தூள்களை தண்ணீரில் கலந்து சோதனை நடத்தியதில் அதில் சாயம் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, அறிவழகனிடம் இருந்து 116 கிலோவும், மாதேஷிடம் இருந்து 95 கிலோ என மொத்தம் 210 கிலோ போலி தேயிலை தூளை உணவுப் பாதுகாப்பு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட தேயிலைத் தூளின் மதிப்பு ரூ.40 ஆயிரம் ஆகும்.

சேலம் செவ்வாய்பேட்டை அருகே உள்ள சந்தைப்பேட்டை சுடுகாடு அருகே உள்ள தனியார் கிட்டங்கியில் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த சதீஷ் (30) தடை விதிக்கப்பட்ட புகையிலை, குட்கா பொருள்கள் பதுக்கி வைத்திருப்பதாக உணவுப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அங்கு சோதனை நடத்திய போது ரூ.ஒரு லட்சம் மதிப்புள்ள 500 கிலோ புகையிலை, 25 கிலோ எடையுள்ள குட்கா உள்ளிட்ட பொருள்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர், புகையிலைப் பொருள்களை பறிமுதல் செய்த அதிகாரிகள் அவற்றை தீ வைத்து அழித்தனர். இதுதொடர்பாக அவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் உணவுப் பாதுகாப்பு அலுவலர் அனுராதா தெரிவித்தார்.

**"உரங்களை அளவோடு பயன்படுத்தவும்'**

பரிந்துரைக்கப்பட்ட அளவில் மட்டுமே உரங்களை பயன்படுத்த வேண்டும் என வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்த வேளாண்துறை செய்திக்குறிப்பு: தற்போது குறுவை சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு, தேவையான இடுபொருள்கள் தாராளமாகக் கிடைக்கும் வகையில் தமிழக அரசு ரூ.150 கோடியை டான்பெட் நிறுவனத்துக்கு வட்டியில்லாத முன்பணமாக வழங்கியுள்ளது. இதைக் கொண்டு டிஏபி உரத்தை கொள்முதல் செய்து தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் விநியோகம் செய்து வருகிறது. தமிழக அரசு உரங்களின் மீதான 4 % வாட் வரி விலக்களித்துள்ளதால் 50 கிலோ மூட்டைக்கு ரூ.11 முதல் ரூ.52 வரை உரங்களின் விலை குறைந்துள்ளது. யூரியா போன்ற தழைச்சத்து உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அதிக அளவில் பயன்படுத்தினால் களைகள் வளர்ந்து, பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும். இதன் மூலம் மகசூல் குறைய வாய்ப்புள்ளது. பரிந்துரைக்கப்பட்ட அளவில் யூரியாவுடன் மணி மற்றும் சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களையும் தவறாமல் விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்.

உரங்களை வாங்கும் போது தவறாமல் ரசீதை கேட்டுப் பெறவும், மூட்டையில் உள்ள விற்பனை விலையை சரிபார்த்து வாங்கவும். மேலும் விவரங்களுக்கு: 0431 2420554.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 64.98 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 64.98 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 15,048 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 3,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**விவசாயத் தொழிலாளர்கள் சாலை மறியல்**

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் அருகேயுள்ள புலவர் நத்தம் கிராமத்தில் தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் அனைவருக்கும் வேலை வழங்க வலியுறுத்தி பெண்கள், விவசாயத் தொழிலாளர்கள் வியாழக்கிழமை சாலை மறியல் போராட்டம் மேற்கொண்டனர்.

அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் மற்றும் அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் ராராமுத்திரைக்கோட்டை ஊராட்சி கிளை சார்பில் நடைபெற்ற இந்தப் மறியல் போராட்டத்தில், ராராமுத்திரைக்கோட்டை கிராமத்தில் தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் நடைபெறும் வேலைகளுக்கு அரசு நிர்ணயித்துள்ள ஊதியம் ரூ. 148-ஐ குறைக்காமல் வழங்க வேண்டும்.

அனைவருக்கும் வேலை வழங்க வேண்டும். பண்ணைக் குட்டை வெட்டும் வேலைக்கு மாற்றாக வேறு வேலை வழங்க வேண்டும். வேலைக்கு வரும் பெண்களை தரக்குறைவாகப் பேசிய பணி மேற்பார்வையாளர் உமாமகேஸ்வரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்துக்கு அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத் தலைவர் கே. கலைச்செல்வி தலைமை வகித்தார். விவசாயத் தொழிலாளர் சங்க ஒன்றியக்குழு உறுப்பினர்கள் எம். தெட்சிணாமூர்த்தி, எல். பிரபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலர் கே. பக்கிரிசாமி, மாதர் சங்க மாவட்டச் செயலர் தமிழ்ச்செல்வி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் வி.கே. கண்ணன், ஒன்றியச் செயலர் கே. செந்தில்குமார், விவசாய சங்க ஒன்றியச் செயலர் கே. முனியாண்டி, ஒன்றியத் தலைவர் வி. மயில்வாகணன் உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்டோர் தஞ்சாவூர் - நாகப்பட்டினம் சாலையில் அமர்ந்து, பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களிடம் அம்மாபேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் என். குபேந்திரன், விஜயலட்சுமி, காவல் ஆய்வாளர் சிங்காரவேலு உள்ளிட்டோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதில் பண்ணைக் குட்டை வெட்டும் வேலைக்குப் பதிலாக மாற்று வேலையை ஏற்படுத்தித் தரப்படும். வேலைக்கு தகுந்த ஊதியம் வழங்கப்படும். வேலைக்கு வரும் பெண்களை தரக்குறைவாகப் பேசியதாகக் கூறப்படும் பணி மேற்பார்வையாளர் உமாமகேஸ்வரியை பணியிடமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதியளித்ததைத் தொடர்ந்து, சாலை மறியல் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

**"பண்ணைக் குட்டைகளை அமைக்க வேண்டும்'**

மழைநீர் சேகரிக்கும் முக்கிய ஆதாரமான பண்ணைக்குட்டைகளை அதிகளவில் அமைக்க விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார் நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.

நாகையில் புதன்கிழமை நடைபெற்ற ஊராட்சித் தலைவர்களுக்கான மழை நீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கத்தில் அவர் பேசியது :

ஆண்டுதோறும் தண்ணீர் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது. குடிநீர் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டியது முக்கிய கடமையாக உருவெடுத்துள்ளது.

வீடுகளில் கூறையின் மீது, மாடி வீடுகளின் மேல் தளத்தில் தங்கும் மழை நீரைச் சேகரிக்க வேண்டியது அவசியம்.

மழை நீர் சேகரிப்பு ஆதாரங்களை அதிகப்படுத்த வேண்டும் என ஏற்கெனவே ஊராட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நாகை மாவட்டம் கடல் சார்ந்த மாவட்டமாக இருப்பதால், கடல் நீர் உள் புகுந்து நிலத்தடி நீர் உவர் தன்மையுடையதாக மாறுபடுவதைத் தடுக்கவும், அதிகளவில் நிலத்தடி நீர் பிடிப்பான் பகுதியில் நீரைச் சேகரித்து நீர் மட்டத்தை உயர்த்தவும் மாவட்ட நிர்வாகம் பல்வேறு துறைகளின் மூலம் அனைத்து ஊராட்சிகளிலும் தடுப்பணைகள், கசிவு நீர் குட்டைகள், பள்ளத்துடன் கூடிய ஆழ்துளைக் கிணறுகள், கதவு தடுப்பணைகள் போன்ற கட்டமைப்புகளை ஏற்படுத்துகிறது.

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மழை நீர் சேகரிப்பின் அவசியம் குறித்து மக்களிடையே விளக்கி, ஆங்காங்கே பண்ணைக் குட்டைகள் அமைக்க வழிவகை செய்ய வேண்டும். இதற்காக அரசு தலா ரூ. 1.5 லட்சம் மானியத்துடன் கூடிய நிதியுதவி வழங்குகிறது. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு, அதிகளவில் பண்ணைக் குட்டைகள் அமைக்க உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

மாவட்ட வருவாய் அலுவலர் மு. ஆசியா மரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வையாளர் து. ரகுநாத், கிராம குடிநீர் திட்ட நிர்வாகப் பொறியாளர் க. கருணாகரன் (பொ), உதவி நிர்வாகப் பொறியாளர் சி. ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**ரூ.90 கோடி பயிர் கடன் வழங்க இலக்கு**

பெரம்பலூர் மாவட்டத்தில் குறுகிய கால பயிர்க் கடனாக ரூ.90 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

வேப்பந்தட்டை வெண்பாவூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், 127 விவசாயிகளுக்கு ரூ.53 லட்சம் பயிர் கடன் வழங்கி அவர் கூறியது:

நிகழாண்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 53 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் குறுகிய கால பயிர்க் கடனாக ரூ.90 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வெண்பாவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம்

வெண்பாவூர், பெரியவடகரை, வி.மாவிலங்கை, பாண்டகபாடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ரூ. 2 கோடி வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயிர் கடன் பெறும் விவசாயிகள் உரிய காலத்தில் திருப்பி செலுத்தினால், அவர்கள் வாங்கிய கடனுக்கு வட்டி இல்லை. எனவே, இதுவரை கடன் பெற்று திரும்பச் செலுத்தாத விவசாயிகளும், புதிதாக கடன் பெறவுள்ள விவசாயிகளும் கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த முன்வர வேண்டும். பொது சேவை மையங்களில் விவசாயிகளுக்கு தேவைப்படும் கணினி சிட்டா நகல் வழங்கப்படுகிறது. வெண்பாவூர் கூட்டுறவு சங்கத்தில் 247 நபர்களுக்கு ரூ.114.61 லட்சம் பயிர் கடனாகவும், 477 நபர்களுக்கு ரூ.128.21 லட்சம் நகைக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. கடன் பெறாத விவசாயிகள் கூட்டுறவு சங்க செயலரை அணுகி பயன்பெறலாம் என்றார் தரேஸ் அஹமது. நிகழ்ச்சியில், சங்கத் தலைவர் லோகநாதன், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் கண்ணன், சங்க துணைத் தலைவர் முத்துசாமி, மத்திய வங்கி கள மேலாளர் துரையரசு, ஊராட்சித் தலைவர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**"இயற்கை உரத்தால் பயன் அதிகம்'**

இயற்கை உரத்தால் அதிகப் பயன் கிடைக்கும் என்றார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை அருகே தொண்டியக்காட்டில் புதன்கிழமை இந்தியன் ரெட்கிராஸ் மாவட்ட கிளை, தொண்டியக்காடு ஊராட்சி சார்பில் நடைபெற்ற திடக்கழிவிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கும் தொடக்க விழாவுக்குத் தலைமை வகித்து மேலும் அவர் பேசியது:

வாழும் பகுதியை நாம் தூய்மையாக வைத்துக் கொண்டால் நீண்ட நாள் நோயின்றி வாழலாம். பிளாஸ்டிக்கை அதிகம் பயன்படுத்துவதால் நிலத்தடி நீர் பாதிக்கிறது.

மண் வளம் கெடுகிறது. எனவே கிராமங்களில் மக்கும் குப்பை, மக்கா குப்பை எனப் பிரித்து வைக்க தனித்தனியாக குப்பைத் தொட்டிகள் வைக்கப்படுகின்றன. மக்கள் அதில் குப்பைகளைப் பிரித்து போட வேண்டும். அதைக் கொண்டு இயற்கை உரம் தயாரித்து விவசாயத்துக்கு பயன்படுத்தினால் அதிகப் பயன் கிடைக்கும் என்றார் ஆட்சியர்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெயலட்சுமி அம்பிகாபதி, முத்துப்பேட்டை ஒன்றியத் தலைவர் நடராசன், ரெட்கிராஸ் கௌரவத் தலைவர் வரதராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**யூரியாவை அளவோடுபயன்படுத்த அறிவுறுத்தல்**

விவசாயிகள் யூரியாவை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தக் கூடாது என்றார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தற்போது யூரியா குறைந்த விலையில் விற்கப்படுவதால் அதிகளவில் அதை விவசாயிகள் பயன்படுத்தி வருகிறார்கள்.

யூரியா போன்ற தழைச்சத்து அளிக்கக்கூடிய உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட அதிகம் பயன்படுத்தினால் பயிர்களின் வளர்ச்சி அதிகமாகி, பூச்சி நோய்த் தாக்குதலுக்குள்ளாக நேரிடும். மகசூல் குறைய வாய்ப்புள்ளது.

விவசாயிகளின் ஒருங்கிணைந்த கையேட்டில் உள்ள மண் வளப் பரிசோதனையின் அடிப்படையில் அல்லது பொதுப் பரிந்துரையின்பேரில் விவசாயிகள் உரங்களை இட வேண்டும். யூரியாவுடன் மணி, சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களை தவறாமல் பயன்படுத்த வேண்டும்.

மேலும் சிறிய அளவிலான யூரியா அதிகப் பயனைக் கொடுப்பதாக விவசாயிகள் கருதுவது தவறு. குருணை வடிவ யூரியா, சிறிய அளவிலான யூரியா இரண்டிலும் தழைச்சத்து 46 சதம்தான் உள்ளது. எனவே எந்த வடிவில் யூரியா இருந்தாலும் அதைப் பரிந்துரைக்கப்பட்ட அளவோடு பயன்படுத்துங்கள் என்றார் அவர்.

**உதவித்தொகை நிறுத்தம்:விவசாய தொழிலாளர்கள் புகார்**

சாத்தான்குளம் வட்டத்தில், விவசாய தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை மூன்று மாதமாக நிறுத்தப்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது.

உழவர் அடையாள அட்டை வைத்துள்ள விவசாய கூலித் தொழிலாளர்களில், 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தமிழக அரசால் மாதம்தோறும் ரூ.1000 உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இதற்காக பயனாளிகளுக்கு ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கடந்த மூன்று மாதங்களாக, உதவித்தொகை வழங்கப்படவில்லை. இதனால் விவசாய தொழிலாளர்கள் கடும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். வழக்கம்போல் உதவித்தொகை வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து சாத்தான்குளம் சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் பொ.மிகாவேல் ஞானதீபம் கூறியதாவது:

இந்தத் திட்டத்திற்கு இப்போது பணம் ஒதுக்கீடு பெறப்படவில்லை. அவை வந்ததும் நிலுவைத் தொகையும் சேர்த்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**விவசாயிகள் சங்கக் கூட்டம்**

முடுக்கலாங்குளத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு, பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் அழகுமுத்துபாண்டியன் பேசினார்.

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் அய்யலுசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவில்பட்டி நகரச் செயலர் பரமராஜ், பாபு, சரோஜா, சீனிவாசன் ஆகியோரும் பேசினர்.

முடுக்கலாங்குளம் சங்க கிளைத் தலைவராக பி.கருப்பசாமி, செயலராக யு.கருப்பசாமி, பொருளாளராக எஸ்.கருப்பசாமி மற்றும் 10 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தீர்மானங்கள்:முடுக்கலாங்குளம் கிராமத்தில் உள்ள பெரியகுளம் கண்மாயில் வடக்கு மறுகால் மற்றும் வடக்கு மடை ஆகியவற்றை உடனடியாக சீரமைக்க வேண்டும்.

சிவந்திப்பட்டி-முடுக்கலாங்குளம் பழுதடைந்த சாலையை உடனடியாக சீரமைக்க வேண்டும். முடுக்கலாங்குளம் கிராமத்திலிருந்து ஊத்துப்பட்டிக்குச் சென்றுவர காலை மற்றும் மாலையில் பள்ளி நேரங்களில் அரசு பேருந்தை இயக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

**"பயறுவகைகளின் உற்பத்தியைப் பெருக்க ரூ. 72.87 லட்சம் மானியம் ஒதுக்கீடு'**

திருநெல்வேலி மாவட்டத்தில் பயறு வகைகளின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் ரூ. 72.87 லட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, ஆட்சியர் சி. சமயமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வியாழக்கிழமை அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மாவட்டத்தில் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் பயறுவகை மிஷன் இனத்தில் 2013-14-ம் ஆண்டில் ரூ. 72.87 லட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பயறுவகைப் பயிர்களான உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு ஆகியவை ஆண்டுதோறும் 20 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் மானாவாரி, இறவைப் பயிர்களாக சாகுபடி செய்யப்படுகிறது. இவற்றின் சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், உற்பத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் பயறுவகை மிஷன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத் திட்டத்தில் பயறுவகை மிஷன் இனத்தின் கீழ் துவரை செயல் விளக்கம், துவரை நடவு மானியம், விவசாயிகள் பயிற்சி, தார்ப்பாய் விநியோகம், விதை விநியோக மானியம், விதை கொள்முதல் மானியம் என்று 6 இனங்களில் மட்டும் மானியம் வழங்க ரூ. 72.87 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் துவரை செயல்விளக்கம் அமைக்க மொத்தத் தொகை ரூ. 15 ஆயிரத்தில் 50 சதவீதம் இடுபொருள் மானியமாக ஹெக்டேருக்கு ரூ. 7,500 வழங்கப்படவுள்ளது. துவரை நடவு செய்யும் விவசாயிகளுக்கும் 50 சதவீதம் இடுபொருள் மானியம் ஹெக்டேருக்கு ரூ. 7,500 ரொக்கமாக வழங்கப்படவுள்ளது. மேலும் துவரை நடவு தொழில்நுட்பம் தொடர்பாக விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அறுவடை செய்யப்பட்ட பயறுவகைப் பயிர்களைப் பாதுகாக்க தார்ப்பாய்கள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படவுள்ளது.

மேலும் உளுந்து, பாசிப்பயறு ஆகிய பயிர்களில் விதைப்பண்ணை அமைக்கும் விவசாயிகளுக்குத் தேவையான ஆதார விதைகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படும். அவ்வாறு உற்பத்தி செய்து வேளாண் துறைக்கு வழங்கப்படும் சான்று விதைகளுக்கு உற்பத்தி மானியமாக கிலோவுக்கு ரூ. 15 வீதம் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. இத் திட்டத்தின்கீழ் பயன்பெற விவசாயிகள் தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குநரையோ, தங்கள் பகுதி வேளாண் அலுவலர், உதவி அலுவலர்களையோ அணுகலாம் என்றார் அவர்.

**சேர்வலாறு அணை நீர்மட்டம் 5 அடி உயர்வு**

திருநெல்வேலி மாவட்ட அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. வியாழக்கிழமை, சேர்வலாறு அணை நீர்மட்டம் 5 அடி உயர்ந்து 134.41 அடியாக இருந்தது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை பெய்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. வியாழக்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்) பாபநாசம் அணை - 21, பாபநாசம் கீழ்அணை - 7, சேர்வலாறு அணை- 3, மணிமுத்தாறு அணை - 11.2, கடனாநதி அணை - 8.4, ராமநதி அணை - 2, அம்பாசமுத்திரம் - 7.2, சேரன்மகாதேவி - 7.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 3,522.52 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து 1,551 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 120.95 அடியாக இருந்தது. சேர்வலாறு அணை நீர்மட்டம் 5 அடி உயர்ந்து 134.41 அடியாக இருந்தது.

மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 66.56 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 59 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து 275 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

கடனாநதி அணை நீர்மட்டம் 84.50 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 798 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து உபரி நீர் ஆற்றில் திறந்துவிடப்பட்டது.

ராமநதி அணை நீர்மட்டம் 83.50 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 140 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து 180 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

தினமலர்

ரப்பர் விலை: உள்நாட்டில் உயர்வு, வெளிநாட்டில் சரிவு



சர்வதேச சந்தைகளில், இயற்கை ரப்பர் விலை சரிவடைந்து வரும் நிலையில், இந்தியாவில், அதன் விலை உயர்ந்து வருகிறது.ரப்பர் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள கேரளாவில், கடந்த இரண்டு மாதங்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் ரப்பர் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.இதனால், உள்நாட்டு சந்தையில் ரப்பர் வரத்து குறைந்து, அதன் விலை உயர்ந்து வருகிறது என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஜூன் மாதம், ஒரு கிலோ, ஆர்.எஸ்.எஸ்-4 ரக இயற்கை ரப்பரின் விலை, 177 ரூபாயாக இருந்தது. இது, தற்போது, 192 ரூபாயாக அதிகரித்துள்ளது. இந்த விலையில் கூட, சந்தைகளில் ரப்பர் ஷீட்டுகள் கிடைப்பது கடின மாக உள்ளதாக, அவர்கள் மேலும் கூறினர்.அதே சமயம், இதே காலத்தில், பாங்காக் சந்தையில், ஒரு கிலோ இயற்கை ரப்பர் விலை, 168 லிருந்து, 155 ரூபாயாக குறைந்துள்ளது.

கேரளாவில், வழக்கமான மழைப் பொழிவில், கிட்டத்தட்ட 75 சதவீதம், கடந்த மூன்று வாரங்களில் பெய்து விட்டது. கடந்த 10 ஆண்டுகளில் காணப்படாத மழையால், ரப்பர் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.சென்ற ஜூன் மாதம், நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி, 64 ஆயிரம் டன்னாக இருக்கும் என, ரப்பர் வாரியம் மதிப்பிட்டிருந்தது. ஆனால், 35,000 - 40,000 டன் என்ற அளவிற்கே இயற்கை ரப்பர் உற்பத்தியானது.

சென்ற, 2012ம் ஆண்டு ஜூன் மாதம், 62 ஆயிரம் டன் இயற்கை ரப்பர் உற்பத்தி செய்யப் பட்டது.கடந்த ஆண்டு, ஒரு கிலோ ரப்பர் விலை, 200 ரூபாயை தாண்டியதை அடுத்து, அது சார்ந்த பொருட்களை தயாரிக்கும், 500க்கும் மேற்பட்ட, சிறிய மற்றும் நடுத்தர ரப்பர் நிறுவனங்கள் மூடப்பட்டன.

இந்நிலையில், தொடர்ந்து மழை பெய்தால், இயற்கை ரப்பர் விலை மேலும் உயர்ந்து, அது சார்ந்த நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.இதை தவிர்க்க, ரப்பர் இறக்குமதி தான் ஒரே தீர்வு என, மோட்டார் வாகன டயர் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு (அட்மா) தெரிவித்து உள்ளது. கிட்டத்தட்ட கிலோவுக்கு, 40 ரூபாய் வித்தியாசம் இருப்பதால், இயற்கை ரப்பர் இறக்குமதி தான் லாபகரமானது என, இத்துறை சார்ந்தவர் களும் தெரிவித்துள்ளனர்.

**தமிழகத்தில் முட்டை விலை 320 காசுகளாக நிர்ணயம்**



நாமக்கல்:தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 320 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. இதில்,முட்டை உற்பத்தி, சந்தை நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். இறுதியில், முட்டை விலையில், 10 காசு குறைத்து, 330 லிருந்து, 320 கா"களாக குறைக்க முடிவு செய்யப்பட்டது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை 337, பெங்களூரு 330, மைசூர் 330, ஐதராபாத் 300, மும்பை 338, விஜயவாடா 305, கோல்கட்டா 315, பர்வாலா 286, டில்லி 311.நாமக்கல்லில் நடைபெற்ற பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முட்டைக் கோழி விலை (கிலோ), 53 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை (கிலோ), 72 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**கரீப் பருவ தானிய உற்பத்தி சாதனை அளவை எட்டும்: சரத்பவார்**



புதுடில்லி:நடப்பு 2013- 14ம் ஆண்டி ற்க ௌனகரீப் பருவத்தில் (ஜூன்-அக்டோபர்), நாட்டின் உணவுதானிய உற்பத்தி, சாதனை அளவை எட்டும் என, மத்தியவேளாண் அமைச்சர் சரத்பவார்தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல மாநிலங்களில்,பருவமழை சிறப்பானஅளவில் பெய்து வருகிறது. இதை யடுத்து, நடப்பு ஜூலை5ம் தேதி வரையிலுமாக, கரீப்பருவத்தில், சாகுபடி பரப்பளவு,401.69 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. அதே சமயம், கடந்த ஆண்டுகரீப் பருவத்தில், பருவமழைகுறைந்ததால், சாகுபடி பரப்பளவு,215.6 லட்சம் ஹெக்டேராக மிகவும் சரிவடைந்திருந்தது.

நடப்பு கரீப் பருவத்தில், ஒரு சில மாநிலங்களில், ஆகஸ்ட் மாதம்வரை, சாகுபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.எனவே,சாகுபடி பரப்பளவு மேலும்அதிகரிக்க வாய்ப்புள்ளது.பொதுவாக, கரீப் பருவத்தில்,நெல், பருப்பு வகைகள்,பருத்தி, மக்காச்சோளம் மற்றும்சோயா ஆகிய உணவு தானியங்கள்,அதிகளவில் சாகுபடி செய்யப் படுகின்றன.

இதையடுத்து, நடப்பாண்டு கரீப் பருவத்தில், உணவுதானிய உற்பத்தி புதிய சாதனை அளவை எட்டும்.இதற்கு முன்பாக, கடந்த 2011- 12ம் ஆண்டு கரீப் பருவத்தில்,நாட்டின் உணவு தானிய உற்பத்தி, அதிகபட்சமாக, 13.13 கோடி டன்னாக இருந்தது.இவ்வாண்டு கரீப் பருவத்தி ல்,நாட்டின் உணவு தானியஉற்பத்தி, மிக சிறப்பானஅளவில் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தானிய உற்பத்தி அதிகரிக்கும்நிலையில், மத்திய அரசு,உணவு பாதுகாப்பு திட்டத்தைநல்ல அளவில் அமல் படுத்தமுடியும் என்பதுடன், விளைபொருட்களின் விலையும்கட்டுக்குள் வரும்.இவ்வாறு, சரத்பவார் தெரிவித்துள் ளார்.

**புதிய பாசன கால்வாய் இரண்டே மாதங்களில் சேதம் விவசாயிகள் அதிருப்தி**

காஞ்சிபுரம்:கோவிந்தவாடி அகரம் ஏரியில், பல லட்சம் ரூபாய் மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்ட பாசனக் கால்வாய்கள், அதிகாரிகளின் அலட்சியத்தால், இரண்டே மாதங்களில்

சேதமடைந்திருப்பது, விவசாயிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. காஞ்சிபுரம் - அரக்கோணம் சாலையில், கோவிந்தவாடி அகரம் பெரிய ஏரி, 452.63 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதனை பயன்படுத்தி, கோவிந்தவாடி, கம்மவார்பாளையம், மணியாட்சி, புத்தேரி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த, 3,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் நெல் பயிரிடுகின்றனர்.

சேதம்

இந்த ஏரியில், தற்போது, கூவம் உபவடி நிலம் நீர் வள, நில வள திட்டத்தின் கீழ், 68.54 லட்சம் ரூபாய் மதிப்பில், கரையை பலப்படுத்தும் பணி மற்றும் மதகு சீரமைப்பு பணி நடந்து வருகிறது. ஏரியில், இரண்டு இடங்களில், பாசனத்திற்கு நீர் வெளியேறும் பிரதான மதகுகள் உள்ளன. இவை, தற்போது சீரமைக்கப்பட்டுள்ளன. ஆனால், மதகில் இருந்து, வயல்வெளிக்கு நீர் செல்லும் பாசனக் கால்வாய்கள் பெரும்பாலான இடங்களில் சேதம் அடைந்து காணப்பட்டன. இதனால், மதகில் திறக்கப்படும் நீர், விவசாய நிலத்திற்கு செல்லாமல், வீணாகி வந்தது. இதற்கு தீர்வாக, பிரதானக் கால்வாய்களை, கான்கிரீட் கால்வாயாக மாற்ற வேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தினர். அதையேற்று, கடந்த ஏப்ரல் மாதம், மதகிலிருந்து கால்வாய் புறப்படும் இடத்தில், 10 மீ., நீளத்திற்கு, கால்வாயின் இரு புறங்களிலும், கான்கிரீட் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டது. உடைப்பு இந்த கான்கிரீட் தடுப்புச் சுவரையொட்டி மண் அணைக்க ஜே.சி.பி., இயந்திரத்தை பயன்படுத்தும்போது, பாசனக் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டது. இவற்றை சீரமைக்க வேறு நிதியில்லை என, ஒப்பந்ததாரர் கையயை விரிப்பதால், பல லட்சம் ரூபாய் செலவழித்து கட்டப்பட்ட பிரதான பாசனக் கால்வாய்கள் பயன்பாடின்றி வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகம் இதுகுறித்து, ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நெல் கொள்முதல் நிலையம் இல்லை இடைத்தரகர்கள் காட்டில் "மழை'**

காஞ்சிபுரம்:நெல் கொள்முதல் நிலையம் இல்லாததால், நெல் மூட்டைகளை "அடிமாட்டு விலைக்கு' விற்க வேண்டிய நிலைக்கு, விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

காஞ்சிபுரம் அடுத்த, நரப்பாக்கம் ஊராட்சியில், சொர்ணவாரி பட்டத்தில், பம்பு செட் மூலம், 50 ஏக்கர் நிலத்தில் விவசாயிகள் நெல் பயிரை சாகுபடி செய்தனர். இந்த பயிர், கடந்த ஒரு வாரமாக அறுவடை செய்யப்பட்டு வருகிறது. நெல் மண்டி வைத்திருக்கும்

நெல் வியாபாரிகள், கிராமங்களில் முகாமிட்டு, விவசாயிகளிடம் நெல் மூட்டைகளை வாங்கி செல்கின்றனர்.

அறுவடைக்கு முன்பே, விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில், தங்கள் பகுதியில் நெல் கொள்முதல் நிலையத்தை தற்காலிகமாக ஏற்படுத்த வேண்டும் என, கோரிக்கை வைத்தனர். ஆனால், வேளாண்மை துறை அதிகாரிகள் துவக்குவதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. இதுகுறித்து, விஷார் கிராமத்தை சேர்ந்த விவசாயி முருகன், கூறியதாவது: நெல் கொள் முதல் நிலையம் ஏற்படுத்தாததால், தனியாரிடம் ஒரு மூட்டை நெல், 980 ரூபாய்க்கு விற்றுள்ளேன்.

இதனால், எனக்கு ஒவ்வொரு மூட்டைக்கும் 130 ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. கஷ்டப்படுவது நாங்கள், இடைத்தரகர்கள் லாபத்தை பார்க்கின்றனர். இவ்வாறு முருகன் கூறினார்.

**மானிய விலையில் விதைகள் விற்பனை**

காஞ்சிபுரம்:மானிய விலையில் விதைகள் விற்பனைக்கு தயாராக உள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில், பரவலாக மழை பெய்து வருவதால், மானாவாரி சாகுபடி விவசாயிகள், நல்ல விளைச்சலை தரக்கூடிய, பயறு வகைகளான, நிலக் கடலை, உளுந்து, பச்சை பயறு, காராமணி, கேழ்வரகு ஆகிய பயிர்களை சாகுபடி செய்யலாம். இதற்கான விதைகளை, அரசு மானிய விலையில் வழங்குகிறது. மேலும், உயர் உரங்கள், நுண்ணூட்டக் கலவை, களைக்கொல்லி, ஜிப்சம் உள்ளிட்ட இடுபொருட்கள், வேளாண்மை விரிவாக்க மையங்களில் வழங்கப்படுகின்றன. இதனை, சிறு, குறு, மானாவாரி விவசாயிகள் வாங்கி பயனடையலாம் என, வேளாண்மை இணை இயக்குனர் சவுந்திரராஜன் தெரிவித்துள்ளார்.

**மீன், இறால் பண்ணைகளுக்கு மின் இணைப்பு... ரத்து! மறுபரிசீலனை செய்ய விவசாயிகள் கோரிக்கை**

திருவள்ளூர்:மீன் மற்றும் இறால் வளர்ப்பு பண்ணைகளுக்கு மின் இணைப்பு ரத்து செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை, மறுபரிசீலனை செய்ய வேண்டும் என, மீன் வளர்ப்போர் விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்து உள்ளது.

மீஞ்சூர் ஒன்றியம், அகரம், தேவம்பட்டு, பள்ளிப்பாளையம், பெரியகரும்பூர் ஆகிய கிராமங்களில், 800 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. ஆண்டுதோறும் சம்பா, குறுவை என, இரு பருவங்களில் நெல் பயிரிட்டு விவசாயம் செய்து வந்தனர்.

தற்போது அங்கு, 150 ஏக்கர் நிலப்பரப்பில், இறால் மற்றும் வண்ண மீன் வளர்ப்பு பண்ணைகள்

அமைக்கப்பட்டு உள்ளன.
துவக்கத்தில், 10 ஏக்கர் நிலப்பரப்பில் தொடங்கப்பட்ட பண்ணைகள், கடந்த, 10 ஆண்டுகளில் 15 மடங்காக பெருகியுள்ளது.
இதற்காக நிலத்தின் உரிமையாளருக்கு, ஆண்டுதோறும் ஏக்கருக்கு, 20 ஆயிரம் ரூபாய் முதல், 50 ஆயிரம் ரூபாய் வரை, பணம் கொடுத்து குத்தகைக்கு எடுத்து, இறால் மற்றும் மீன் வளர்ப்பு தொழிலில் ஏராளமானோர் ஈடுபட்டு வருகின்றனர்.
மூன்று மாதத்திற்கு ஒரு முறை அறுவடை செய்து, அதிக லாபம் ஈட்டும் தொழிலாக இது மாறியுள்ளது.

விவசாயம் பாதிப்பு

இறால் மற்றும் மீன் பண்ணைகளில் அதன் வளர்ச்சிக்காகவும், நோய் தாக்குதல்களை சமாளிக்கவும் சுண்ணாம்பு, உப்பு, துத்தநாகம் மற்றும் ரசாயனக் கலவைகள் தெளிக்கப்படுகின்றன. பண்ணைகளில் இருந்து கழிவுகள் கால்வாய்கள் மூலமாக வெளியேற்றப் படுகின்றன.

அவை, அருகிலுள்ள குளம், ஏரிகளில் சென்று கலக்கின்றன. இதனால், சுற்றியுள்ள விவசாய நிலங்களிலும் கலந்து, விளை நிலங்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. நெற்கதிர்களின் வேர்களும் அழுகி, வீணாகின்றன.
அதிலிருந்து தப்பிப் பிழைக்கும் விளை நிலங்களில் கிடைக்கும் நெல் மணிகளும் தரமற்றவையாக இருப்பதுடன், விளைச்சலும் குறைந்தளவே இருக்கிறது. ஏக்கருக்கு, 30 முதல் 35 மூட்டைகள் வரை அறுவடை செய்து வந்த விவசாயிகள், தற்போது, 10 முதல் 15 மூட்டைகள் மட்டுமே கிடைப்பதாக வேதனையுடன் கூறுகின்றனர்.

மின் இணைப்பு ரத்து

இதுகுறித்து, விவசாயிகள் குறைதீர்ப்புக் கூட்டத்தில் அளித்த புகாரை அடுத்து, ஆட்சியர் வீர ராகவ ராவ், தேவம்பட்டு கிராமத்தில் உள்ள, நன்னீர் மீன் மற்றும் இறால் வளர்ப்பு பண்ணைகளுக்கு மின் இணைப்பை ரத்து செய்து ஆணை பிறப்பித்தார்.
இதற்கிடையே, மின் இணைப்பு ரத்து செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என, தமிழ்நாடு மீன் வளர்ப்போர் விவசாயிகள் நல சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
இதுதொடர்பாக, விவசாயிகள் சங்கத்தின் சார்பில், ஆட்சியர் வீர ராகவ ராவிடம் அளித்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:
விவசாயம் சார்ந்த தொழில் மீன் வளர்ப்பு என, அரசாங்கம் அறிவித்துள்ளதால், விவசாய நிலத்தில் ஒரு பகுதியை பண்ணைக் குட்டையாக மாற்றி, மீன் மற்றும் நன்னீர் இறால் வளர்ப்பு செய்து வருகிறோம். இதன் மூலம், நிலத்தடி நீர் உயர்ந்து, கடல் நீர் ஊடுருவது தடுக்கப்பட்டுள்ளது.

பண்ணை குட்டையின் நீரை பயன்படுத்தி, விவசாயமும் செய்கிறோம். . இந்நிலையில், தேவம்பட்டு மற்றும் கும்மிடிப்பூண்டி பகுதிகளில் உள்ள நன்னீர் மீன் மற்றும் இறால் வளர்ப்பு பண்ணைகளுக்கு மின் இணைப்பை ரத்து செய்ய, ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதை, மறுபரிசீலனை செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.
விவசாயிகள் புகார்
இதுகுறித்து, மீன் வளர்ப்போர் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கூறுகையில், "சில நபர்களின் வேளாண் நிலங்களை அன்னிய முதலீட்டாளர்கள் விலைக்கு வாங்கி, அதை வீட்டுமனைப் பிரிவுகளாக மாற்றி, விற்பனை செய்து லாபம் அடைந்துள்ளனர். ""மற்றவர்களின் நிலத்தையும் வாங்க, விவசாயிகள் பெயரில், இதுபோன்ற புகார்களை அளித்து, எங்களை தொழில் செய்ய விடாமல் தடுக்கின்றனர்," என்றனர். இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத மீன்வளத் துறை அதிகாரிகள் கூறுகையில், ""தேவம்பட்டு கிராமத்தில் உள்ள மீன், இறால் பண்ணைகளுக்கு மின்தடை தற்காலிகமாகத்தான் நிறுத்தி வைக்க ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். அவர்களது கோரிக்கை குறித்து மறுபரிசீலனை செய்யப்படும்" என்றார்.
பண்ணைகளில் இருந்து கழிவுகள் கால்வாய்கள் மூலமாக வெளியேற்றப் படுகின்றன

**கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.30 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

நாமக்கல்: நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், 30 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. பருத்திக்கு உரிய விலை கிடைத்ததால், விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.
நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், வாரந்தோறும் வியாழக் கிழமை, பருத்தி ஏலம் நடப்பது வழக்கம். பருத்திக்கு உரிய விலை கிடைப்பதால், நாமக்கல் மாவட்டம் மட்டுமின்றி, அருகே உள்ள, திருச்சி, துறையூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளும், உற்பத்தி செய்த பருத்தியை, விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். அவ்வாறு கொண்டுவரப்படும் பருத்தி, ஏல முறையில் விற்பனை செய்யப்படுகிறது. ஏலத்தில், சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், திருச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று, பருத்தியை போட்டி போட்டு ஏலம் எடுத்துச் செல்கினறனர். அதன்படி, நேற்று நடந்த ஏலத்தில், மொத்தம், 1,300 பருத்தி மூடைகள் கலந்துகொண்டன.

அதில், 100 கிலோ எடை கொண்ட ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி மூட்டை குறைந்தபட்சம், 4,900 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 5,386 ரூபாயக்கும் வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். அதுபோல், சுரபி ரக பருத்தி, 5,980 ரூபாய் முதல், 6,700 ரூபாய் வரை வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். அதன்படி, நேற்று மொத்தம், 30 லட்சம் ரூபாய்க்கு ஏலம் நடந்தது. பருத்திக்கு உரிய விலை கிடைத்ததால், விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.

**தர்மபுரி உழவர் சந்தையில் வியாபாரிகள் ஆதிக்கம் : கட்டுப்படுத்த பொதுமக்கள் கோரிக்கை**

தர்மபுரி: தர்மபுரி உழவர் சந்தையில், வியாபாரிகள் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. இதை கட்டுப்படுத்த வேண்டும் என, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், நெல், கரும்பு, வாழைக்கு இணையாக காய்கறி பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் காய்கறிகள் வெளி மாவட்டங்களுக்கும், கர்நாடகா மாநிலம் பெங்களூரு உள்ளிட்ட சில பகுதிகளுக்கும் காய்கறிகள் செல்கிறது.
காய்கறி உற்பத்தி அதிகம் இருப்பதால், தர்மபுரி மாவட்டத்தில் காய்கறிகளின் விலை குறைவாக இருக்கும். உள்ளூர் காய்கறிகள் விலை மலிவாக கிடைக்கும். தர்மபுரி மக்கள் உழவர் சந்தை மூலம் காய்கறிகளை அதிகம் வாங்கி செல்கின்றனர். வியாபாரிகளும், தங்கள் காய்கறிகளை, நேரடியாக விற்பனை செய்து வருகின்றனர்.
தர்மபுரி உழவர் சந்தையில், 75க்கும் மேற்பட்ட கடைகளில், 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் காய்கறிகளை விற்பனை செய்து வருகின்றனர். சமீப காலமாக வியாபாரிகள் காய்கறிகளை விற்பனை செய்வதும், காய்கறிகள் விற்பனைக்கு கடை ஒதுக்கீடு பெற்ற விவசாயிகள் மூலம் மறைமுகமாக காய்கறிகளை விற்பனை செய்வதும் அதிகம் நடந்து வருகிறது.
வறட்சி காரணமாக, கடந்த இரண்டு மாதங்களாக காய்கறிகளில் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது. வெளி மார்க்கெட்டில் விலை அதிகம் இருக்கும் என்பதால், பெரும்பாலான பொது மக்கள், உழவர் சந்தைக்கு காய்கறிகள் வாங்க வந்து செல்கின்றனர்.
காய்கறிகள், கடந்த காலங்களை போல், வெளி மார்க்கெட்டின் விலையை விட குறைத்து வைப்பதில்லை, மாம்பழங்கள் சீசன் துவங்கியது முதல், வெளி மார்க்கெட் விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதே போல், சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், கேரட், பீட்ரூட், உருளை, பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகள் சில நாட்கள் மட்டும் வெளி மார்க்கெட்டை விட விலை குறைவாக உள்ளது.
மற்ற நாட்களில், வெளி மார்க்கெட் விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. விலை நிர்ணயம் செய்து, போர்டில் விலை குறிப்பிடபட்டாலும், முதல் ரகம் என கூறி காய்கறிகளில் விலை அதிகம்

விற்பனை செய்வது சமீப காலமாக அதிகம் உள்ளது.
பேபி கார்ன், காளான், எலுமிச்சை பழங்களும் வெளி மார்க்கெட்டுக்கு இணையாக விற்பனை செய்யப்படுகிறது. கீரைகள், புதினா, மல்லி இலை உள்ளிட்டவைகள், 100, கிராம் என விலை நிர்ணயம் செய்யப்பட்ட போதும், எடை போட்டு, வழங்குவதில்லை. மாறாக கட்டுக்கு என நிர்ணம் செய்து வாங்குகின்றனர்.
இதில், எடை குறைவாக இருப்பதாக குற்றச்சாட்டு உள்ளது. கீரை, மல்லி, புதினா உள்ளிட்டவைகள் ஒரு கட்டுக்கு விலை நிர்ணயம் செய்தால், இது போன்ற விலை ஏற்ற, இறக்கத்தை தடுக்க முடியும். அதே போல், எடையிலும் வித்தியாசம் வருகிறது. ஒரு கிலோவுக்கு, 100 முதல், 200 கிராம் எடை குறைவாக காய்கறிகள் உள்ளதாகவும் நுகர்வோர் குற்றம்சாட்டுகின்றனர். விவசாயிகள் போர்வையில் வியாபாரிகளின் ஆதிக்கம் அதிகம் இருப்பதால், இது போன்ற முறைகேடுகள் அதிகம் நடந்து வருகிறது. உழவர் சந்தையை கண்காணிக்கும் வேளாண் அலுவலர்கள், இது குறித்து கண்டுகொள்வதில்லை. இதனால், வியாபாரிகள் கூடராமாக உழவர் சந்தை மாறி வருகிறது.

**காய்கறி விலை தொடர்ந்து உயர்வு: நடுத்தர மக்கள் பெரும் பாதிப்பு**

ஓசூர்: ஓசூர் தாலுகாவில், உற்பத்தி குறைவால், சந்தைகளில் காய்கறிகள் விலை உயர்ந்துள்ளது. இதனால், நடுத்தர மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.
ஓசூர் தாலுகாவில், திருப்பூர், கோவைக்கு அடுத்தப்படியாக, தமிழகத்தில் அதிகளவு காய்கறிகள் உற்பத்தியாகிறது. ஓசூர் உழவர்சந்தைக்கு தினம், 120 டன் முதல், 150 டன் காய்கறிகள் விற்பனைக்கு வருகிறது.
பத்தலப்பள்ளி மொத்த காய்கறி மார்க்கெட்டில் இருந்து தினம், 2,000 டன் காய்கறிகள், வெளி மாநிலங்கள், தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு ஏற்றுமதியாகிறது. கடந்த இரு ஆண்டுகளாக ஓசூர் தாலுகாவில் பருவமழை பொய்த்ததால், காய்கறிகள் சாகுபடி பரப்பு குறைந்து, சந்தைகளுக்கு வரத்து குறைந்துள்ளது.
ஓசூர் உழவர்சந்தைக்கு, தற்போது, 102 டன் மட்டுமே விற்பனைக்கு வருகிறது. இவற்றில் பெரும்பாலான காய்கறிகளை, உழவர்சந்தை வியாபாரிகள் வெளிமாவட்டங்களில் இருந்து இறக்குமதி செய்து, விற்பனை செய்கின்றனர்.
பத்தலப்பள்ளி காய்கறி மார்க்கெட்டுக்கு காய்கறிகள் வரத்து கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. உழவர்சந்தையில் வரத்து குறைவால் கேரட் கிலோ, 45 ரூபாய், மூட்டைகோஸ், 18, பிட்ரூட், 15, தக்காளி, 30, காளிஃப்பிளவர், 22, பாகற்காய், 20, அவரைக்காய், 21, பீன்ஸ், 18 ரூபாய் என காய்கறிகள் விற்பனை செய்கின்றனர்.

வெளிமார்க்கெட்டில் இந்த விலையை விட காய்கறிகள், 25 சதவீதம் முதல், 50 சதவீதம் வரை கூடுதலாக விற்பனையாகிறது. அதனால், ஏழை, நடுத்தர வீடுகளில் விலை உயர்வால் அன்றாட சமையலில் காய்கறிகள் பயன்பாடு குறைந்துள்ளது.
* வியாபாரிகளுக்கு லாபம்: உழவர் சந்தையில், விவசாயிகள் போர்வையில், வியாபாரிகள்தான் வியாபாரம் செய்வதால், தற்போது, காய்கறிகள் தட்டுப்பாட்டை சாதகமாக பயன்படுத்தி, அதிகாரிகள் ஆசியுடன் வெளிமாவட்டங்களில் இருந்து காய்கறிகளை இறக்குமதி செய்து, கொள்ளை லாபத்திற்கு விற்பனை செய்கின்றனர்.
குறிப்பாக, கேரட், பிட்ரூட், தக்காளி ஆகியவற்றை ஊட்டி ரகம் எனக்கூறி வியாபாரிகள், உழவர்சந்தையில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

**வரும் 17ம் தேதி கெலவரப்பள்ளி அணை நீர் பாசனத்துக்கு திறப்பு**

ஓசூர்: ஓசூர் கெலவரப்பள்ளி அணை நீர் வரும், 17ம் தேதி பாசனத்துக்கு திறந்து விடப்படுகிறது. இதனால், வலது மற்றும் இடதுபுற கால்வாய்கள் தூர்வாரும் பணி முழுவீச்சில் நடக்கிறது. ஓசூர் கெலவரப்பள்ளி அணை நீர் மட்டம், 44 அடியாகும். தற்போது, தென்பெண்ணை ஆற்றில் நீர் வரத்து அதிகரித்து அணை நீர் மட்டம், 36 அடியாக உள்ளது. தென்பெண்ணை ஆற்றில் தொடர்ந்து நீர் வரத்து காணப்பட்டாலும், கெலவரப்பள்ளி அணை நீர் மட்டத்தை பொதுப்பணித்துறை அதிகாரிகள் உயர்த்தாமல், அணைக்கு வரும் தண்ணீர் முழுவதையும், கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணைக்கு திறந்து விட்டுள்ளனர்.
தமிழக அரசு, வரும், 17ம் தேதி, கெலவரப்பள்ளி அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட உத்தரவிட்டது. இதனால், அணையின் வலது மற்றும் இடது புற கால்வாய்கள் தூர்வாரும் பணி முழு வீச்சில் நடக்கிறது.
இப்பணியில், 50க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். தற்போது, இடதுபுற கால்வாய் தூர்வாரும் பணி முழுமையடைந்துள்ளது. நேற்று முதல், வலது புற கால்வாய் தூர்வாரும் பணி நடந்தது. வலது புற கால்வாய், சிப்காட்-2 அசோக்லேலேண்ட் தொழிற்சாலை அருகே சென்று செல்கிறது.
அசோக்லேலேண்ட் கம்பெனிக்குள், நேற்று யானை நின்றதால், தொழிலாளர்கள் தூர் வாரும் பணியில் ஈடுபட மறுத்தனர். அதனால், கால்வாய் தூர்வாரும் பணி பாதிக்கப்பட்டது.

**வாழை விவசாயிகளுக்கு இழப்பீடு தாமதம் : ஓராண்டாக வேளாண்மை துறையினர் "கொர்'**

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் கடந்த ஆண்டு சூறாவளி காற்றால் பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளுக்கு, வேளாண்மை துறை சார்பாக இழப்பீடு வ ழங்க அதிகாரிகள் ஆய்வு

செய்து சென்று, ஒரு ஆண்டை கடந்தும் எவ்வித தகவலும் இல்லாததால், வேளாண் துறை மீது விவசாயிகள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

சத்தியமங்கலம் பகுதியில் விவசாயிகள் அதிகமாக வாழை பயிரிட்டுள்ளனர். குறிப்பாக செவ்வாழைக்கு முக்கியதுவம் கொடுக்கின்றனர். கடந்த ஆண்டு சத்தியமங்கலம் பகுதியில் உள்ள அரியப்பம்பாளையம் பகுதியில் முன்னாள் கவுன்சிலர் ரத்தினசாமி மற்றும் அப்பகுதியை சேர்ந்த பலர் வாழை பயிரிட்டிருந்தனர்.

கடந்த ஆண்டு மே மாதம், 5ம் தேதி அரியப்பம்பாளையம் பகுதியில் வீசிய திடீர் சூறாவளி காற்றால் ரத்தினசாமிக்கு சொந்தமான வாழை வயலில், 300 செவ்வாழைகள் பிஞ்சாக இருக்கும்போது அடியோடு சாய்ந்தது. இதேபோல் பெரியூர் பகுதியிலும் வாழை விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது.

இது குறித்து, விவசாயிகள் வேளாண்மை துறை மற்றும் வருவாய் துறைக்கு தகவல் கொடுத்து, நாசமான வாழைக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். அப்போதைய சத்தியமங்கலம் தாசில்தார் மாதேஸ்வரன் மற்றும் வி.ஏ.ஓ., மகாலிங்கம், இவர்களுடன் வேளாண்மை, மற்றும் பிற துறை அதிகாரிகளும் வந்து ஆய்வு செய்தனர். விவசாயிகளிடம் ஆறுதல் கூறி, மூன்று மாதத்துக்குள் இதற்கான இழப்பீட்டை அரசு வழங்கும் எனக்கூறி சென்றனர்.

ஒரு ஆண்டு கடந்த நிலையில், இதுவரை எவ்வித தகவலும் இல்லை. விவசாயிகளுக்கு அரசு பல திட்டங்கள் கொண்டு வருகிறது. ஆனால் அதிகாரிகளின் மெத்தனத்தால், பல திட்டம், நிதி ஒதுக்கீடு போன்றவை விவசாயிகளை சென்றடைவதில்லை.

இழப்பீடு வழங்குவது குறித்து எவ்வித தகவலும் விவசாயிகளுக்கு வழங்கவில்லை. வேளாண் அதிகாரிகளிடம் கேட்டாலும், இதுகுறித்து எவ்வித தகவலும் கூற மறுக்கின்றனர். இதனால், வேளாண் துறை மீது விவசாயிகள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

**மஞ்சளுக்கு ஊடுபயிராக வெங்காயம் சாகுபடி**

கோபிசெட்டிபாளையம்: மஞ்சள் விலை வீழ்ச்சியால், கோபி சுற்று வட்டாரத்தில் நடப்பாண்டு மஞ்சள் பரப்பளவு குறைந்துள்ளது. பாசனங்களுக்கு தண்ணீர் திறப்பால் மஞ்சள் பயிரிடலாம், என அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

பருவமழை ஏமாற்றம் மற்றும் மஞ்சளுக்கு கூடுதல் விலை கிடைக்காததால், விவசாயிகள் மஞ்சளை பயிரிடாமல் இருந்தனர். கடந்த ஆண்டில், அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில், 4,000 ஏக்கரில் மஞ்சளை பயிரிட்டனர். பவானிசாகர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. எல்.பி.பி., பாசனத்துக்கும், ஆகஸ்ட் மாதம் தண்ணீர் திறக்கப்படும், என விவசாயிகள் எதிர்நோக்கி உள்ளனர்.

மஞ்சளில் ஊடுபயிராக வெங்காயம் பயிரிட்டால், ஓரளவுக்கு லாபம் கிடைப்பதால், கோபி சுற்று வட்டாரத்தில் மஞ்சள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர். கோபி, டி.என்.பாளையம், கள்ளிபட்டி, பங்களாபுதூர் ஆகி ய சுற்று வட்டாரத்தில் தடப்ப ள்ளி, அரக்கன்கோட்டை பாசன நீர் மூலம் மஞ்சள் சாகுபடியை விவசாயிகள் துவங்கி உள்ளனர். தடப்பள்ளி பாசனப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:

கோபி சுற்று வட்டாரத்தில் அதிகளவில் கரும்பு, மஞ்சள், நெல் பயிரிடப்படுகிறது. சென்ற, 2009ம் ஆண்டில் ஏற்பட்ட மஞ்சள் விலை உயர்வு காரணமாக, கரும்பு விவசாயிகள் பலரும், மஞ்சளுக்கு மாறினர். மஞ்சள் விலை தொடர்ந்து சரி வடைந்ததால், மஞ்சள் பயிரிட்ட விவசாயிகள் பெரும் ஏமாற்றத்துக்கு ஆளாகினர்.

மஞ்சள் விலையை, விவசாயிகளே நிர்ணயம் செய்ய வேண்டும், என கோரிக்கை விடுத்து வருகின்றனர். மஞ்சளுக்கு போதிய விலை கிடைக்காத போதிலும், மஞ்சளில் ஊடுபயிராக வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. வெங்காயத்தின் விலை நன்றாக இருப்பதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படவாய்ப்பில்லை.

கோபி சுற்று வட்டாரத்தில், கடந்தாண்டில், 1,400 ஏக்கரில் மஞ்சள் பயிரிடப்பட்டது. நடப்பாண்டு இதுவரை, 150 ஏக்கரில் மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மஞ்சள் பரப்பளவு, 400 முதல், 500 ஏக்கர் வரை அதிகரிக்கலாம், என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நடவு செய்ய விவசாயிகள், கூலி ஆட்கள் சரியாக கிடைக்காததால், விவசாயப்பணியில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**வறட்சி நிவாரணத்தில் பாரபட்சம்**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் வழங்கப்பட்ட வறட்சி நிவாரணத்தில் பாரபட்சம் காட்டப்பட்டதாக, அமைச்சரை முற்றுகையிட முயற்சித்த விவசாயிகளால், பரபரப்பு ஏற்பட்டது. தமிழகத்தில், சென்னை மாவட்டம் தவிர, 31 மாவட்டங்கள் வறட்சியால், பாதித்த மாவட்டமாக அரசு அறிவித்தது. வறட்சி நிலவரம் குறித்து வேளாண் துறை, வருவாய் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் ஆய்வு நடத்தினர். பாதிக்கப்பட்ட டெல்டா விவசாயிகளு க்கு, நேரடியாக வங்கி கணக்கு மூலம் உரிய நிவாரணம் வழங்கப்பட்டது.

டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் வறட்சி குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, நிவாரணம் வழங்கப்பட்டதில், ஈரோடு மாவட்டத்தில், பவானி, அந்தியூர், அம்மாபேட்டை, பெருந்துறை, சென்னிமலை, நம்பியூர், பவானிசாகர், சத்தி, தாளவாடி ஆகிய யூனியன்கள் அதிகமான வறட்சிக்கு இலக்கானது.

ஆறு தாலுகாவிலும், 78,308 ஏக்கர் விவசாய பகுதிகளில், 25,769 விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு, 25 கோடியே, 27 லட்சத்து, 46 ஆயிரம் ரூபாயை சம்பந்தப்பட்ட தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் மூலம், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டது. இதில், பெருந்துறை தாலுகாவுக்கு மட்டும், அதிகமான வறட்சி நிவாரணம் வழங்கப்படதாகவும், மற்ற கோபி, அந்தியூர், பவானி தாலுக்கா பகுதிகளுக்கு மிகக் குறைந்த நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக, அப்பகுதி விவசாயிகள் குற்றஞ்சாட்டினர். இந்நிலையில், நேற்று, கலெக்டர் ஆபீஸில், அமைச்சர்கள் தோப்பு வெங்கடாசலம், ராமலிங்கம், எம்.எல்.ஏ .க்கள் கலந்து கொண்ட ஆய்வு கூட்டத்துக்கு, வறட்சி நிவாரணம் கேட்டு, நம்பியூர், வெள்ளப்பாளையம், பொன்னம்மை, மொட்டாலம், கிச்சிப்பாளையம், வலசு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் வந்திருந்தனர்.
கூட்டம் நடந்து கொண்டிருந்ததால், விவசாயிகள் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. அதனால், அவர்கள், கதவின் முன் அமர்ந்து கோஷமிட முயற்சித்தனர். அப்போது அங்கு வந்த இன்ஸ்பெக்டர் விஜயன், தலைமையிலான போலீஸார், விவசாயிகளை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். அதனால், அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. நம்பியூர் பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்ட நிலையில், பெருந்துறை விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு, 3,000 ரூபாய் வழங்கப்பட்டது போல், எங்களுக்கும் வழங்க வேண்டும். அமைச்சர் தொகுதி என்பதால், அதிகாரிகள் ஒருதலைபட்சமாக கணக்கீடு செய்து, வறட்சி நிவாரணம் வழங்கியுள்ளனர், என விவசாயிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு குறுகிய கால பயிர்க்கடன் ரூ.90 கோடி வழங்க இலக்கு: கலெக்டர்**

பெரம்பலூர்: ""பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு குறுகிய கால பயிர்க்கடனாக 90 கோடி ரூபாய் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது,'' என பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்துள்ளார்.
பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வெண்பாவூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் நடந்த நிகழ்ச்சியில், 127 விவசாயிகளுக்கு 53 லட்சம் ரூபாய் மதிப்பில் பயிர் கடன் கொடுத்த கலெக்டர் தரேஷ்அஹமது பேசியதாவது:
இந்தாண்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 53 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் குறுகிய கால பயிர்கடனாக 90 கோடி ரூபாய் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
வெண்பாவூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் மூலம் வெண்பாவூர், பெரியவடகரை,

வி.மாவிலங்கை, பாண்டகபாடி ஆகிய கிராமங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு இரண்டு கோடி ரூபாய் வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
பயிர் கடன் பெறும் விவசாயிகள் உரிய காலத்தில் திருப்பி செலுத்தினால், அவர்கள் வாங்கிய கடனுக்கு வட்டி இல்லை. எனவே, இதுவரை கடன் பெற்று திரும்ப செலுத்தாத விவசாயிகள், புதிதாக கடன் பெறவுள்ள விவசாயிகள் பெறும் கடனை உரிய காலத்தில் திருப்பி செலுத்த முன்வர வேண்டும். பொது சேவை மையங்களில் விவசாயிகளுக்கு தேவைப்படும் கணினி சிட்டா நகல் வழங்கப்படுகிறது.
இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வெண்பாவூர் கூட்டுறவு சங்கத்தில் 247 பேருக்கு 114.61 லட்சம் ரூபாய் பயிர் கடனாகவும், 477 பேருக்கு 128.21 லட்சம் ரூபாய் நகைக்கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. கடன் பெறாத விவசாயிகள் கூட்டுறவு சங்க செயலாளரை அணுகி பயன்பெறலாம்.
இவ்வாறு அவர் பேசினார்.
இந்நிகழ்ச்சியில், வெண்பாவூர் கூட்டுறவு கடன் சங்க தலைவர் லோகநாதன், கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் கண்ணன், சங்க துணை தலைவர் முத்துசாமி, மத்திய வங்கி கள மேலாளர் துரையரசு, சங்க செயலாளர் கணேசன், பஞ்சாயத்து தலைவர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**ஓடையை வாய்க்காலாக மாற்றிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் அதிருப்தியில் விவசாயிகள்**

வடமதுரை:வடமதுரை அருகே நான்கு வழிச்சாலை பணியில் காட்டோடைக்கு பதிலாக வாய்க்கால் போல நீர்பாதை அமைக்கப்பட்டுள்ளது.
புத்தூர் ஊராட்சி கரிவாடன்செட்டிபட்டி மலையடிவாரத்தில் சேகரமாகும் மழை நீர் முட்டுகொம்பு காட்டோடையாக அப்பிநாயக்கன்பட்டி, மணியகாரன்பட்டி, பெருமாள்கோவில்பட்டி வழியே செல்கிறது.
திண்டுக்கல்- திருச்சி ரயில் மற்றும் நான்கு வழிச்சாலையை பெருமாள்கோவில்பட்டி அருகில் கடக்கிறது. கனமழை நேரத்தில் இந்த ஓடையில் அதிகளவில் நீர் பெருக்கெடுக்கும். 50 ஆண்டுகளுக்கு முன்பு அதிக நீர் வரத்தால், தண்டவாளப் பாதை அரிக்கப்பட்டு, ரயில் விபத்து நடந்துள்ளது. இதனால் இவ்விடத்தில் மூன்று சிறு பாலங்களை ரயில்வே அமைத்தது. நான்கு வழிச்சாலை பணியில் இந்த ஓடையை மண் போட்டு மேவி ரோடு அமைக்கப்பட்டது. இதற்கு பதிலாக அகல, ஆழமாக நீர் பாதை அமைக்காமல், சிறு வாய்க்கால் போல அமைத்தனர்.
கனமழை நேரத்தில் ஓடை நீர் கரையை உடைத்து கொண்டு, விளைநிலத்திற்குள் பாய்ந்து பாதிப்பை ஏற்படுத்துகிறது. முன்பிருந்த அளவில் நீர் பாதையை உருவாக்க வேண்டும்.

**வறட்சியால் விளைச்சல் இல்லை மார்க்கெட் தொழிலாளர்கள் பாதிப்பு**

ஒட்டன்சத்திரம்:வறட்சி காரணமாக காய்கறி விளைச்சல் வெகுவாக குறைந்து விட்டதால், ஒட்டன்சத்திரம் மார்க்கெட் கூலி தொழிலாளர்கள் வருமானம் இன்றி தவித்து வருகின்றனர். மாநிலத்தில் உள்ள பெரிய மார்க்கெட்களில், ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட் முக்கியத்துவம் பெற்றது. உள்ளூர் காய்கறி வரத்து மட்டுமின்றி, அருகிலுள்ள மாவட்டங்கள் மற்றும் கர்நாடகா, ஆந்திராவில் இருந்தும் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கு விற்பனைக்கு கொண்டு வரப்படும் காய்களில் அதிகப்படியானவை, கேரள வியாபாரிகளால் வாங்கப்பட்டு அங்கு கொண்டு செல்லப்படுகின்றன. மழையில்லாததால், விளைச்சல் இல்லை. காய்கறி வரத்து மிகவும் குறைந்து விட்டது. மார்க்கெட்டை சார்ந்து ஏராளமான குடும்பங்கள் உள்ளன. மூட்டை தூக்கும் தொழிலாளர்கள், கணக்கு எழுதுபவர்கள், எடை போடுபவர்கள் என்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட கூலித்தொழிலாளர்கள் மார்க்கெட்டில் வேலை செய்து வருகின்றனர். இவர்கள் முழுக்க முழுக்க மார்க்கெட் வருமானத்தை நம்பியே வாழ்க்கையை ஓட்டி வருகின்றனர். காய்கறி விளைச்சல் பாதிக்கப்படும் போது வேலை கிடைப்பது அரிதாக உள்ளது. போதுமான வருமானம் இன்றி தவிக்கின்றனர்.

**சுதந்திரத்தின் போது இருந்த காடுகள் 27 சதவீதம்; தற்போது 7 ஆக குறைவு வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார்**

வத்திராயிருப்பு:"" இந்திய சுதந்திரத்தின் போது இருந்த காடுகள் 27 சதவீதம். தற்போது இருப்பதோ 7 சதவீதம் தான்," என இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் வேதனை தெரிவித்தார்.

வத்திராயிருப்பு லயன்ஸ் சங்கம், சென்னை "சீ - மூமெண்ட்' அமைப்பு சார்பில் விவசாயிகளுக்கான கருத்தரங்கு, கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. சங்க தலைவர் கணேசபாண்டியன் தலைமை வகித்தார். சீ-மூமெண்ட் தலைவர் முகேஷ் முன்னிலை வகித்தார். சங்க நிர்வாகி சாதுகணபதிராமன் வரவேற்றார். விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்து நம்மாழ்வார் பேசியதாவது: வேதிப்பொருட்கள் அடங்கிய உரங்களால் இயற்கை வளம் மிக்க நிலங்கள் மலடாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் சிலவருடங்களில் மண் விவசாயத்திற்கே பயன்படாத நிலை ஏற்படப்போகிறது. மத்திய அரசு விவசாயிகளுக்கான அரசாக இல்லை. மாறாக விவசாயப்பொருட்களை வாங்கி விற்கும் வியாபாரிகளுக்கு சாதகமாகவே உள்ளது. ஒருபுறம் விவசாயிகள் விளைபொருட்களுக்கு விலையின்றி கடனாளிகளாகிக் கொண்டிருக்கின்றனர். மறுபுறம் வாங்கி விற்கும் வியாபாரிகள் கோடீஸ்வரராகிக் கொண்டிருக்கின்றனர். மனிதன் காடுகளை வேகமாக அழித்து வருகிறான்.

இந்தியா சுதந்திரம் வாங்கும்போது 27 சதவீத காடுகள் இருந்தன. தற்போது வெறும் 7 சதவீத காடுகளே உள்ளன. இயற்கை விவசாயத்திற்கு விவசாயிகள் இப்போதே மாறாவிட்டால், சிலவருடங்களில் விவசாயத்தை விட்டு விவசாயிகள் வெளியேற வேண்டிய நிர்பந்தம் ஏற்படும், என்றார். ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். நாகானந்தசுவாமி வாழ்த்தி பேசினார். சங்க செயலாளர் சீனிவாசன் நன்றி கூறினார்.

**பயறு வகை மிஷன் திட்டம் ரூ.72.87 லட்சம் மானியம்**

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் பயறு வகை மிஷன் திட்டத்திற்கு 72.87 லட்சம் ரூபாய் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.நெல்லை மாவட்டத்தில் பயறு வகை பயிர்களான உளுந்து, பாசி பயறு மற்றும் தட்டைப் பயறு ஆகியவை ஆண்டு தோறும் சுமார் 20 ஆயிரம் எக்டேர் பரப்பில் மானாவாரி மற்றும் இறவை பயிர்களாக சாகுபடி செய்யப்படுகிறது. பயறு வகை பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகரிக்க பயறு வகை மிஷன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் துவரை செயல் விளக்கம், துவரை நடவு மானியம், விவசாயிகள் பயிற்சி, தார் பாய் வினியோகம், விதை வினியோக மானியம், விதை கொள்முதல் மானியம் ஆகியவற்றிற்கு 72.87 லட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் துவரை செயல் விளக்கம மற்றும் நடவு செய்ய எக்டேருக்கு தலா 7,500 ரூபாய், தார் பாய்கள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. உளுந்து, மற்றும் பாசி பயறு வகைகளில் தேவையான விதைக் 50 சதவீத மானியம் வழங்கப்படும்.
இத்திட்டத்தின் கீழ் பயன் பெற விவசாயிகள் தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குனரையோ அல்லது தங்கள் பகுதி வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி பயன் பெறலாம் என்று கலெக்டர் சமயமூர்த்தி தெரிவித்தார்.

**களக்காட்டில் இன்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

சேரன்மகாதேவி : களக்காட்டில் இன்று(12ம்தேதி) நடக்கும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொள்ள சேரை., சுற்றுவட்டார விவசாயிகளுக்கு சப்-கலெக்டர் ரோகிணி ராம்தாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
சேரன்மகாதேவி சப்-கலெக்டர் தெரிவித்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- நான்குநேரி வட்டம் களக்காடு கிராமம் கோயில்பத்து சமுதாய நலக்கூடத்தில் இன்று (12ம் தேதி) காலை 10 மணிக்கு நான்குநேரி வட்டாரம் மற்றும் சுற்றுக்கிராமங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு வட்டார அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் சேரை., சப்-கலெக்டர் தலைமையில் நடக்கிறது. கூட்டத்தில் அனைத்து அரசுத்துறை அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர். எனவே நான்குநேரி, அம்பை, மற்றும் ராதாபுரம் வட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வன்னிக்கோனேந்தலில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி**

தேவர்குளம் : வன்னிக்கோனேந்தலில் மழைநீர் சேகரிப்பு பற்றிய விழிப்புணர்வு பேரணி நடந்தது. மேலநீலிதநல்லூர் யூனியன் வன்னிக்கோனேந்தல் பஞ்.,சில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது. பேரணியை வன்னிக்கோனேந்தல் பஞ்., தலைவி உடையம்மாள் சுப்பையா பாண்டியன், துணைத்தலைவர் கிருஷ்ணசாமி ஓய்வு பெற்ற ஆசிரியர் சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வன்னிக்கோனேந்தல் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியை பேச்சியம்மாள் மற்றும் உதவி ஆசிரியர்கள் பள்ளி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் பேரணியில் கலந்து கொண்டனர். பேரணியில் மழை இன்றி அமையாது உலகு, மழை நீரை சேமிப்போம், குடிநீரை பாதுகாப்போம் என தெருக்களில் முழக்கம் இட்டுச் சென்றனர். ஏற்பாடுகளை பஞ்சாயத்து உதவியாளர் முருகன் செய்திருந்தனர்.

தினகரன்

**முட்டை விலை 10 காசு குறைந்தது**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 10 காசு குறைந்து, ஒரு முட்டை 320 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடந்தது. கோழிப்பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் பங்கேற்று விற்பனை நிலவரம் குறித்து ஆலோசித்தனர். முட்டை விலையில் மேலும் 10 காசுகள் குறைக்க முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து, முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 330 காசில் இருந்து 320 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த 10 நாளில் முட்டை விலை 53 காசுகள் வரை குறைந்துள்ளது.

**சுங்க வரியை உயர்த்தியதால் சர்க்கரை இறக்குமதி விரைவில் குறையும்**

புதுடெல்லி : சர்வதேச சந்தையில் சர்க்கரை விலை வீழ்ச்சியடைந்துள்ளது. உள்நாட்டு சர்க்கரையை விட வெளிநாட்டு சர்க்கரை விலை குறைவாக இருப்பதால், வர்த்தகர்கள் பலர் அதை நாட ஆரம்பித்தனர். இதனால், உள்நாட்டு சர்க்கரை ஆலைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. மேலும், கரும்பு விவசாயிகளுக்கு அவர்கள் தர வேண்டிய நிலுவைத் தொகையையும் தர முடியவில்லை.

இதையடுத்து, சர்க்கரை இறக்குமதி வரியை 10 சதவீதத்தில் இருந்து 40 சதவீதமாக உயர்த்த

கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. இதை பரிசீலித்த மத்திய அரசு இறக்குமதிக்கான சுங்கவரியை 10 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்தியது. இதனால் மேலும் வரியை உயர்த்த சர்க்கரை ஆலைகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில், மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத்பவார் கூறியதாவது: சர்க்கரை இறக்குமதிக்கான சுங்க வரியை மேலும் உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க முடியாது.

இப்போது உயர்த்தப்பட்டுள்ள 15 சதவீத வரியினாலேயே, சர்க்கரை இறக்குமதி பெருமளவில் குறையும். இப்போதைக்கு இறக்குமதி குறைவது நல்ல விஷயம்தான். ஏனெனில், சர்க்கரை ஆலை கிடங்குகளில் ஏராளமான அளவு சர்க்கரை தேங்கிக் கிடக்கிறது. நாடு முழுவதும் உள்ள கரும்பு விவசாயிகளுக்கு ரூ.9000 கோடி நிலுவை தொகை உள்ளது என்றார்.

**சாத்தனூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட கோரிக்கை**

திருக்கோவிலூர், : திருக்கோவிலூர் பேரூ ராட்சி மன்ற துணைத் தலைவர் குணசேகரன் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி உள்ள கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:

திருக்கோவிலூர் பேரூராட்சி பகுதிகளில் கடும் வறட்சி நிலவி வருவ தால் நாளுக்கு நாள் குடிநீர் பஞ்சம் அதிகரித்து வருகிறது. இதனால் பொதுமக்கள் குடிநீர் கிடைக்காமல் கடுமையாக அவதிப்பட்டு வருகின்றனர்.

இதுதொடர்பாக பேரூராட்சி நிர்வாகத்திடம் கேட்டபோது தென் பெண்ணை ஆற்றில் நிலத் தடி நீர் மட்டம் இல்லை. குடிநீருக்காக போடப்பட்ட ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார்கள் தண்ணீர் இன்றி வெறும் மோட்டார்களாக தான் இயங்குகிறது என்று தெரிவிக்கின்றனர். இந்நிலையில் வறட்சி நிவாரண பொதுநிதியில் இருந்து தென்பெண்ணை ஆற்றின் அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து அதன்மூலம் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் அதிலும் தண்ணீர் இன்றி வறட்சியாக காணப்படுகிறது. திருக்கோவிலூரில் இருந்து வெளியூர்களுக்கு தண்ணீர் வழங்கிய நிலையில் தற்போது திருக்கோவிலூர் நகரம் பொதுமக்களுக்கு நான்கு நாட்களுக்கு ஒரு முறை கூட குடிநீர் வழங்க முடியாத நிலையில் உள் ளது.

எனவே இங்கு நிலவி வரும் கடும் வறட்சியை போக்க சாத்தனூர் அணை யில் இருந்து தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ் வாறு அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**தென்மேற்கு பருவ மழையால் ஆடி பட்ட விதைப்பு பணி துவக்கம்**

கோவை, : கோவை மாவட்டத்தில் பருவ மழையால் ஆடி பட்ட விதைப்பு பணி 1 லட்சம் எக்டேரில் துவங்கியது.

கோவை மாவட்டத்தில் 3.71 லட்சம் எக்டேரில் விளைநிலம் இருக்கிறது. ஆண்டுதோறும் 850 மி.மீ முதல் 900 மி.மீ வரை மழை பெய்தால் விவசாய பயிர் சாகுபடி முழுமையாக நடக்கும். கடந்த ஆண்டில், 60 சதவீத விளைநிலத்தில் மட்டுமே விவசாய பயிர் சாகுபடி நடந்தது. நடப்பாண்டில், தென்மேற்கு பருவ மழை கடந்த மாதம் துவங்கியது. பொள்ளாச்சி, ஆனைமலை, கிணத்துக்கடவு, மதுக்கரை, தொண்டாமுத்தூர், துடியலூர், பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. கடந்த மாதம் சராசரியாக 263 மி.மீ மழை பெய்துள்ளது. இந்த மழையை நம்பி, சோளம், கம்பு, ராகி, நிலக்கடலை போன்றவை 43 ஆயிரம் எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மானாவாரி நிலங்களிலும் சோளம் விதைக்கப்பட்டு வருகிறது. ஆடி பட்ட சீசனில் நல்ல மழை பெய்யும் என வானிலைத்துறை அறிவித்துள்ளது.
தற்போது சோளம் விதைத்தால் ஓரிரு மாதத்தில் சோளம் செழித்து வளர்ந்து விடும். மழை பெய்வது நின்று போனால் கூட சோள பயிர் தீவன தேவைக்கு முழுமையாக பயன்படும் என விவசாயிகள் கருதுகின்றனர். மாவட்ட அளவில் இந்த மாதம் வரை 1 லட்சம் எக்டேரில் விவசாய பயிர் சாகுபடி துவங்கியுள்ளது. மாவட்டத்தின் உட்புற பகுதியில் கனமழை பெய்யவில்லை. எனவே தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் ஏமாற்றத்தில் உள்ளனர். இதுபற்றி வேளாண்மை துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ''கடந்த மே மாதமே பருவ மழையை முன்னிட்டு உழவு பணியை துவக்கவேண்டும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. மழைக்கு முன்பே உழவு பணியை முடித்து விட்டால் மழை பெய்தவுடன் சோளம், கம்பு விதைத்து விடலாம். ஒரு மாதத்தில் பயிர் செழித்து வளர்ந்து விடும். லேசான மழை பெய்தால் கூட பயிர் வளர்ந்து விடும். தற்போது மழை பெய்து வருவதால் விவசாயிகள் நம்பிக்கையுடன் பயிர் சாகுபடி செய்து வருகின்றனர். மானிய விலையில் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகங்களில் விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் வேளாண் மகசூல் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது'' என்றார்.

**25 % உர செலவை குறைக்க அசோஸ்பைரில்லம் இடுங்கள் வேளாண் அதிகாரி அறிவுரை**

சேதுபாவாசத்திரம்: மண் வளம் காக்க, 25 சத வீதம் உரச்செலவை குறைக்க அசோஸ்பைரில் லம் நுண்ணுயிரை பயிர்களுக்கு இடவேண்டும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண் இயக்குநர் பெரியசாமி, வேளாண் அலுவலர் மதியரசன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:
அசோஸ்பயிரிலம் நுண்ணுயிர் ஒரு பாக்டீரியா வகையை சார்ந்தது. இது வளர்வதற்கு

மிகக்குறைந்த அளவு காற்று போதுமா னது. காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து பயிர்களுக்கு அளிக்கிறது. நெல் மற்றும் பிற தானிய பயிர்களின் வேர் மண்டலத்தில் இணைந்து வாழும் நுண்ணுயிர். அசோஸ்பை ரில்லம் நுண்ணு யிரியை நெல், கம்பு, சோளம், கேழ் வரகு, பனிவரகு, தினை, சாமை, குதிரைவாலி போன்ற தானிய பயிர்களுக் கும், பருத்தி, சூரியகாந்தி மற்றும் கரும்பு போன்ற இதர பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். விதை நேர்த்தி செய்ய ஒரு பொட்டலமும் (200 கிராம்), நாற்றுவிட்டு நடவு செய்யும் பயிர்களுக்கு நாற்றின் வேர்களை நனைக்க 2 பொட்டலமும் (400 கிராம்), நடவு வயல் அல்லது நேரடி விதைப்பு செய்யும் நிலத்திற்கு ஏக்கருக்கு 4 பொட்டலமும் (800 கிராம்) வீதம் பயன்படுத்த வேண்டும். இந்த நுண்ணுயிர் பயன்படுத்துவதால் ரசாயன தழைச்சத்து உரம் இடுவதில் 25 சதவீதத்தை குறைத்து கொள்ளலாம். பயிர்களின் மகசூல் அதிகரிப்பதுடன் மண் வளம் பாதுகாக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கள் தெரிவித்துள்ளனர்.

**முற்றிலும் வறண்டதால் பழநி நகராட்சிக்கு பாலாறு அணை தண்ணீர் இனி இல்லை**

பழநி, : பாலாறு அணை நீரின்றி வறண்டதால் பழநி நகருக்கு குடிநீர் சப்ளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பழநி நகரில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இதுதவிர, பழநி கோயிலுக்கு சராசரியாக தினமும் 30 ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் வந்து செல்கின்றனர். நகரில் சுமார் 7500 வீட்டு இணைப்புகளும், 280 பொதுக்குழாய் இணைப்புகளும் உள்ளன. இவைகளுக்கு கொடைக்கானல் சாலையில் உள்ள கோடைகால நீர்த்தேக்கத்தில் இருந்தும், பாலசமுத்திரத்தில் உள்ள பாலாறு அணையில் இருந்தும் தண்ணீர் எடுக்கப்படுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை பாலாறு அணையில் இருந்து நாளொன்றிற்கு சுமார் 28 லட்சம் லிட்டரும், கோடைகால நீர்த்தேக்கத்தில் இருந்து சுமார் 28 லட்சம் லிட்டரும் தண்ணீர் பெறப்பட்டது. கடந்த 2 வருடங்களாக பழநி பகுதியில் போதிய மழை பெய்யவில்லை. இதனால் குடிநீருக்கு ஆதாரமான பாலாறு அணைக்கு போதிய நீர்வரத்து இல்லை. இந்நிலையில் பாலாறு அணையில் இருந்த சிறிதளவு தண்ணீரும் விவசாயத்திற்கு திறந்து விடப்பட்டதால், தற்போது குடிநீருக்குக்கூட நீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பழநி நகரில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. போ திய நீர் இல்லாததால் நகரின் பல பகுதிகளுக்கு வாரத்திற்கு ஒருமுறைதான் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது பாலாறு அணையில் குடிநீர் எடுக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதால், பழநி நகர மக்களின் குடிநீர் தேவை கேள்விக்குறியாகி உள்ளது. இதுகுறித்து பழநி நகராட்சித் தலைவர் வேலுமணியிடம் கேட்டபோது, Ôபாலாறு அணையில் தண்ணீர் குறைவாக இருந்ததால் விவசாயத்திற்கு திறக்கக்கூடாது என வலியுறுத்தப்பட்டது. ஆனால், சில தனியார் வயல்களின் விவசாயத்திற்காக தண்ணீர் தொடர்ந்து திறந்து விடப்பட்டு

வந்தது. மறியல் போன்ற பல்வேறு போராட்டங்கள் நடத்தியும் பயன் ஏதுமில்லை. தற்போது அணையை நான், நகராட்சி ஆணையர் (பொ) தங்கராஜ் ஆகியோர் பார்வையிட்டோம். குடிநீருக்கு தண்ணீர் இல்லாமல் வற்றிக் காய்ந்து விட்டது. ஆகையால் பழநி நகராட்சிக்குட்பட்ட 4, 5, 6, 7, 8, 9, 25, 26, 30, 31 ஆகிய வார்டுகளுக்கு முழுவதுவமாக குடிநீர் சப்ளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
தற்காலிகமாக இந்த வார்டுகளுக்கு 3 நாட்களுக்கு ஒருமுறை லாரிகள் மூலம் குடிநீர் சப்ளை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. விரைவில் இப்பிரச்னையை சரிசெய்யவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்Õ என்றார்.

**காரைக்குடி பகுதியில் பூச்சிகள் தாக்குதலால் கத்தரி விலை கையை 'கடித்தது'! வெண்டையும் சுருங்கியதால் விவசாயிகள் வேதனை**

காரைக்குடி, : காரைக்குடி பகுதியில் பூச்சிகளின் அதிரடி தாக்குதலால் கத்தரி, வெண்டை விளைச்சல் கடுமையாக பாதித்துள்ளது. இதனால் விலை குறையும் வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.
காரைக்குடி அருகே கருநாவல்குடி, பெத்தாச்சி குடியிருப்பு, பெரியகோட்டை, விலாடிகாடு, ஊத்திக்குடி, சிங்கம்பட்டி உள்ளிட்ட ஊர்களில் விவசாயிகள் வெண்டை, கத்தரி செடிகளை அதிகளவில் பயிரிட்டுள்ளனர். இப்பகுதியில் சுமார் 10 ஏக்கர் வரை இந்த செடிகள் பயிரிடப்பட்டுள்ளது.
கத்தரி விளைச்சலை பொறுத்தவரை காய்கள் நன்கு விளைந்தால் ஒரு ஏக்கருக்கு குறைந்தது 300 முதல் 400 கிலோ வரை கிடைக்கும். தற்போது காய்கறிகளின் விலை உயர்வால் நல்ல விலை கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர்.
ஆனால், காய்ப்புழு, செந்தாளை உள்ளிட்ட பூச்சிகளின் தாக்குதலால் கத்தரி விளைச்சல் பாதிப்படைந்துள்ளது. இதனால் தரம் பிரிக்கக்கூட முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். ஏக்கருக்கு சுமார் ரூ.30 ஆயிரம் வரை செலவு செய்தும் பயனில்லாமல் போச்சே என்று புலம்புகின்றனர். கிலோ ரூ.25 & 30 வரை விற்கப்பட்டு வந்த கத்தரிக்காய்கள் தற்போது பூச்சி தாக்குதலால் விலை குறையும் நிலையில் உள்ளது.
கத்தரியை விட வெண்டை நிலவரம் பெரும் கலவரமாக இருக்கிறது. பூச்சிகளின் தாக்குதலில் வெண்டை வளர்ச்சி குறைந்து சுருங்கி காணப்படுகிறது. பூச்சிகளை தடுக்க மருந்து தெளித்தும் பலனில்லை. வேளாண் அதிகாரிகளும் ஆலோசனைகள் வழங்க வருவதில்லை. இதனால் இப்பகுதி விவசாயிகள் மிகுந்த கலக்கத்தில் உள்ளனர்.
இதுகுறித்து விவசாயி உய்யவந்தாள் கூறுகையில், 'ஒரு ஏக்கரில் கத்தரி, வெண்டை பயிரிட்டுள்ளேன். பூச்சி தாக்குதலால் இரண்டுமே பாதிக்கப்பட்டுள்ளன. விளையும் காய்களை

காரைக்குடி உழவர் சந்தை, மற்றும் மார்க்கெட்டில் சென்று விற்று வருவோம். காய்களின் பாதிப்பு அறிந்து ஆலோசனை வழங்க வேளாண் அதிகாரிகள் யாருமே வருவதில்லை' என்றார்.

**வாட் வரி விலக்கால் உரங்களின் விலை குறைந்தது**

சிவகங்கை, : தமிழக அரசின் 4 சதவீத வாட் வரி விலக்கால் உரங்களின் விலை குறைந்துள்ளது. இதுதொடர்பாக தமிழக வேளாண்மை இயக்குநர் முனைவர் ராஜேந்திரன் அறிக்கை: தமிழகத்தில் தற்போது குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் 4 சதவீத வாட் வரியில் இருந்து உரங்களுக்கு தமிழக அரசு விலக்கு அளித்துள்ளது. இதனால் 50 கிலோ மூட்டை கொண்ட உரங்களின் விலை ரூ.11 முதல் ரூ.52 வரை குறைந்துள்ளது. இதில் யூரியா மட்டும் மிக குறைந்த விலையில் கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் அதிக அளவில் யூரியாவை பயன்படுத்துவதாக தெரிகிறது.

தழைச்சத்து மட்டும் அளிக்க கூடிய யூரியாவை பரிந்துரைக்கப்பட்ட அளவை விட கூடுதலாக பயன்படுத்தினால் பயிர்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

ஆனால் பயிர்கள் அதிக அளவில் பூச்சிநோய் தாக்குதலுக்கு உள்ளாகும். இதனால் மகசூலும் குறையும். இதை தவிர்க்க விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேட்டில் உள்ள மண்வள பரிசோதனை மற்றும் பொது பரிந்துரை அடிப்படையில் உரங்களை இட வேண்டும். யூரியாவுடன் மணி சத்து, சாம்பல் சத்து தரக் கூடிய உரங்களையும் தவறாமல் பயன்படுத்த வேண்டும். டான்பெட் நிறுவனம் டிஏபி உரங்களை கொள்முதல் செய்து, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் விநியோகித்து வருகிறது. இதற்காக தமிழக அரசு ரூ.150 கோடியை டான்பெட் நிறுவனத்திற்கு வட்டியில்லா முன்பணமாக அளித்துள்ளது. எனவே யூரியாவுடன், டிஏபி உரத்தையும் விவசாயிகள் வாங்கி பயன்படுத்தலாம். சிறிய அளவிலான யூரியா அதிக பலன் தரக்கூடியது என தவறான எண்ணம் விவசாயிகளிடம் உள்ளது. ஆனால் குருணை வடிவிலான யூரியா, சிறிய அளவிலான யூரியா இரண்டிலும் 46 சதவீதம் தான் தழைச்சத்து உள்ளது. எனவே எந்த யூரியாவை வேண்டுமானாலும் பரிந்துரைக்கப்பட்ட அளவில் பயன்படுத்தலாம். உரங்களை வாங்கும்போது தவறாமல் ரசீது பெற வேண்டும். மூட்டையில் உள்ள விற்பனை விலையை சரிபார்த்து வாங்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**கர்நாடகத்தில் கனமழை பெய்தும் சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து இல்லை தி.மலை, விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் ஏமாற்றம்**

திருவண்ணாமலை: கர்நாடக மாநிலத்தில் கனமழை பெய்து ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள நிலையிலும், சாத்தனூர் அணையின் நீர்மட்டம் உயராததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாய சாகுபடிக்கு சாத்தனூர் அணை முக்கிய நீர் ஆதாரமாக அமைந்திருக்கிறது. அணையின் பாசனத்தை நம்பி, விழுப்புரம் மாவட்டத்தில் 30,537 ஏக்கர், திருவண்ணாமலை மாவட்டத்தில் 19,463 ஏக்கர் உள்பட மொத்தம் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி நடைபெறுகிறது.

திருக்கோவிலூர் பழைய ஆயக்கட்டு பகுதியில் 7,543 ஏக்கர் பரப்பளவில் நடைபெறும் விவசாய சாகுபடியும் அணையின் தண்ணீரை நம்பியே உள்ளன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 40 ஏரிகளும், விழுப்புரம் மாவட்டத்தில் 48 ஏரிகளும் சாத்தனூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்தால் மட்டுமே நிரம்பும் வாய்ப்புள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக சாத்தனூர் அணை நிரம்பவில்லை.

அதனால், இந்த ஆண்டு நேரடி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கவில்லை. ஏரிகளுக்கு மட்டுமே கடந்த மார்ச் மாதம் தண்ணீர் திறக்கப்பட்டது. சாத்தனூர் அணையின் மொத்த உயரம் 119 அடி. நீர்கொள்ளளவு 7,321 மில்லியன் கன அடியாகும். நேற்று மாலை நிலவரப்படி அணையில் 72.60 அடி உயரம் மட்டுமே தண்ணீர் உள்ளது.

நீர் கொள்ளளவு 995 மில்லியன் கன அடியாக உள்ளது. இது அணையின் மொத்த நீர் இருப்பில் 15 சதவீதமாகும். இந்த அளவு அணை வறண்டு போன வரலாறு இதுவரை எப்போதும் நிகழ்ந்ததில்லை.

இந்நிலையில், கர்நாடக மாநிலத்தில் கடந்த 20 நாட்களாக தொடரும் கன மழையால், அங்குள்ள ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ளத்தை கட்டுப்படுத்த முடியாமல் திணறும் கர்நாடக அரசு, காவிரியில் தண்ணீரை திறந்துவிட்டுள்ளது. எனவே, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

ஆனால், கர்நாடக மாநிலம் நந்திதுர்கா மலையில் இருந்து உற்பத்தியாகும் தென்பெண்ணை ஆற்றில் இருந்து இதுவரை தமிழகத்துக்கு ஒரு துளி தண்ணீரும் வந்து சேரவில்லை. எனவே, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து இல்லை. கர்நாடக மாநிலத்தில் பெய்யும் கனமழையால், தென்பெண்ணை ஆற்றில் வெள்ளம் வரும், சாத்தனூர் அணை நிரம்பும் என நம்பியிருந்த விவசாயிகள் தற்போது ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

கர்நாடக மாநிலத்தில் பெய்யும் மழையும் கைகொடுக்கவில்லையே என விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர். தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே, கர்நாடக மாநிலத்தில் கட்டப்பட்டுள்ள அணைகள், புதிது புதிதாக கட்டப்பட்டு வரும் தடுப்பணைகளால், தமிழகத்துக்கு வரும் தண்ணீர் தடைபடுவதாக விவசாயிகள் வேதனைபடுகின்றனர்.

எனவே, இயற்கையின் கருணையால், ஆடி பட்டத்தில் பெய்யும் மழையை மட்டுமே விவசாயிகள் பெரிதாக நம்பியிருக்கின்றனர்.
பாக்ஸ்

' கர்நாடக மாநிலம் நந்திதுர்கா மலையில் இருந்து உற்பத்தியாகும் தென்பெண்ணை ஆற்றில் இருந்து இதுவரை தமிழகத்துக்கு ஒரு துளி தண்ணீரும் வந்து சேரவில்லை. எனவே, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டடப்பட்டுள்ள சாத்தனூர் அணைக்கு நீர்வரத்தும் இல்லை.'

**வரத்து அதிகரிப்பு எதிரொலி இடைப்பாடி வாரச்சந்தையில் காய்கறி விலை சரிந்தது**

**தகுதியற்றவர்களுக்கு வீட்டுமனை பட்டா? தனி தாசில்தார் விசாரணையால் பரபரப்பு**

ஆத்தூர்: ஆத்தூர் அருகே தகுதியானவர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதா? என்பது குறித்து தனித்தாசில்தார் விசாரணையில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

சேலம் மாவட்டம் ஆத்துுர் ஒன்றியம் ராமநாயக்கன்பாளையம் கிராமத்தில் உள்ள 79 ஆதிதிராவிடர் குடும்பத்தினருக்கு கடந்த 2012ம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் வீட்டுமனை பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டன. தகுதியற்றவர்களுக்கும், ஏற்கனவே வீட்டுமனை பெற்றவர்களுக்கும் மீண்டும் பட்டா வழங்கப்பட்டுள்ளதாக புகார் எழுந்தது. இதுதொடர்பாக தனி தாசில்தார் கண்ணன் விசாரணையில் ஈடுபட்டார்.

இதற்காக நேற்று ஒரே நாளில் 30க்கும் மேற்பட்டவர்கள் ஆதிதிராவிடர் நலத்துறை தாசில்தார் அலுவலகத்தில் குவிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. புகார் தெரிவிக்கப்பட்ட அனைவரிடமும் இலவச வீட்டுமனை பட்டாக்களை பெற்று தனி தாசில்தார் ஆய்வு செய்தார்.
இதுகுறித்து அவர் கூறியதாவது:
ராமநாயக்கன்பாளையம் கிராமத்தில் வழங்கப்பட்ட இலவச வீட்டுமனை பட்டாக்கள் தகுதியற்றவர்களுக்கும், ஏற்கனவே வீட்டுமனை உள்ளவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக அதே பகுதியே சேர்ந்த சிவபாலன் என்பவர் அரசுக்கு புகார் மனு அனுப்பி இருந்தார். இதன் அடிப்படையில் அந்த பகுதியில் வழங்கப்பட்ட பட்டாக்களை பெற்றவர்களிடம், அவர்களுக்கு எந்த தகுதியின் அடிப்படையில் பட்டாக்கள் வழங்கப்பட்டன என்பது குறித்து பட்டாதாரர்களை நேரில் அழைத்து விசாரணை நடத்தினேன். அவர்கள் தெரிவித்த தகவல்கள் மற்றும் எனது விசாரணை குறித்த அனைத்து விபரங்களையும் அறிக்கையாக மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்படும். தவறு இருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
இவ்வாறு தனி தாசில்தார் கண்ணன் கூறினார்.

**ஆத்தூர் ராமநாயக்கன்பாளையத்தில் மேட்டூர் நீர்த்தேக்க பகுதியில் அவசரகதியில் அறுவடை**

மேட்டூர்: மேட்டூர் நீர்த்தேக்க பகுதியில் சாகுபடி செய்துள்ள பயிர்களை விவசாயிகள் அவசரகதியில் அறுவடை செய்து வருகின்றனர்.
மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறையும் சமயங்களில் நீர்பிடிப்பு பகுதிகளான கூணாண்டியூர், கீரைக்காரனூர் உள்ளிட்ட இடங்களில் குறுகிய கால விவசாய பயிர்களை சாகுபடி செய்வதும், மகசூலுக்கு முன்னதாக நீர்வரத்து அதிகரிக்கும்போது அதனை அவசரம், அவசரமாக அறுவடை செய்வதும் வழக்கமாக உள்ளது.
இந்நிலையில், மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்ததால் கம்பு, எள், சோளம் சுரைக்காய், புடலை, பாகற்காய் போன்ற பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்திருந்தனர். இந்த பயிர்கள் அறுவடைக்கு வரும் சமயத்தில் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது.
அணையின் நீர்மட்டம் 62 அடியை தாண்டியதால் கூணாண்டியூர், கீரைக்காரனூர் பகுதிகளில் காவிரி படுகையில் கிராம மக்கள் விதைத்திருந்த பயிர்கள் நீரில் மூழ்கி வருகின்றன. இதனை அவசரம், அவசரமாக அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
ஆனால், கிராம மக்கள் 100 நாள் வேலைக்கு சென்றுவிடுவதால் ஆட்கள் கிடைக்காத நிலையில், பயிர்களை அறுவடை செய்வதில் தாமதம் ஏற்படுகிறது. இதனால், பயிர்கள் நீரில் மூழ்கி வருவதால் முதல்போக சாகுபடி எடுத்த நிலையில், 2ம் போக சாகுபடி தங்களுக்கு கைகொடுக்கவில்லை என அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். இன்னும் இரண்டு வாரங்கள் தாக்கு பிடித்திருந்தால் கம்பு, சுரைக்காய் பயிரில் லட்சக்கணக்கான ரூபாய் லாபம் கிடைத்திருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**உணவு பதப்படுத்தும் தொழில் அபிவிருத்திக்காக ரூ10 கோடி வரை மானியம் விண்ணப்பிக்க அழைப்பு**

கரூர்: உணவு பதப்படுத்தும் தொழில் அபிவிருத்திக்கு ரூ.10 கோடி வரை மானியம் அளிக்கப்படுகிறது. எனவே தொழில்முனைவோர் விண்ணப்பிக்கலாம் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
இது குறித்து தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கக அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தேசிய உணவு பதப்படுத்தும் இயக்ககத்தின் மூலம் மத்திய, மாநில அரசுகள் மாவட்ட அளவில் இயக்ககங்களை அமைக்க உள்ளது. இதில் தொழில்முனைவோருக்கு 75:25 என்ற விகிதத்தில் மானிய பங்கு தொகை வழங்கப்பட உள்ளது. வேளாண் பொருட்களின் தேவையை அதிகரிக்கவும், அறுவடைக்குப்பின் அவற்றை சேமிக்கும் வகையில், தொழில்நுட்ப மேலாண்மை

மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களில் தொழில் முனைவோருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவது, நவீனப்படுத்துவது திட்டத்தின் கீழ் கருவிகள் தளவாடங்கள் மற்றும் தொழில் கட்டுமானத்திற்கு 25% மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.50 லட்சம் மானியம் நிதியுதவி வழங்கப்படுகிறது. குளிர்சாதன வசதி, குளிரூட்டப்பட்ட வாகனம் போன்றவைக்கு கருவிகள் தளவாடங்கள், கட்டுமானத்திற்கு 50% அல்லது அதிகபட்சமாக ரூ.10 கோடி மானியம் நிதியுதவி செய்யப்படுகிறது. இதன்படி உணவு பதப்படுத்தும் பயிற்சி மையங்களுக்கும் மானியம், நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதில் பயன்பெற விரும்பும் தொழில்முனைவோர் விண்ணப்பிக்கலாம். கரூர் மாவட்ட உணவு பதப்படுத்தும் இயக்ககம், வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண்மை வணிகம்) மூலம் மாநில இயக்கக இயக்குனருக்கு மானியம் கோரும் விண்ணப்பங்கள் அனுப்பப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எஸ்சி, எஸ்டி, சிறு, குறு விவசாயிகளுக்கு குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தில் முன்னுரிமை கலெக்டர் தகவல்**

தஞ்சை: குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தில் பயன்பெற ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு குறு விவசாயிகள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். முன்னுரிமை பதிவேட்டில் பதியப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் விவசாயிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். தமிழக முதல்வர் ஜெயலலிதா காவிரி டெல்டா விவசாயிகளுக்காக குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை அறிவித்துள்ளார். இத்திட்டத்தின்கீழ் குறுவை நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 8 பாக்கெட் உயிர் உரங்கள், 5 கிலோ நெல் நுண்ணூட்டம் மற்றும் ஒரு லிட்டர் தாவர பூச்சிக்கொல்லி அடங்கிய இடுபொருள் பைகள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. காரத்தன்மையுடைய நிலங்களுக்கு ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் இலவசமாக வழங்கப்பட உள்ளது. தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டி 180 மீட்டம் நீளம், 90 மிமீ விட்டம் கொண்ட எச்டிபிஇ பைப்புகள் 1,610 தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட உள்ளது.

பைப் லைன் பெற விவசாயி பெயரில் போர்வெல் இருக்க வேண்டும். 2013ம் ஆண்டு குறுவையில் நெல் சாகுபடி செய்து இருக்க வேண்டும். ஒரு குடும்பத்திற்கு ஒரு யூனிட் மட்டுமே வழங்கப்படும். இடுபொருட்கள் பெற 2013ம் ஆண்டு குறுவையில் நெல் சாகுபடி செய்து இருக்க வேண்டும். இரு திட்டங்களிலும் பயன்பெற விவசாயி ரேஷன் கார்டு நகல், போர்வெல் மின் அட்டை நகல், புகைப்படம் ஆகிய ஆதாரங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். ஆதிதிராவிடர்,

பழங்குடியினர், சிறு குறு விவசாயிகள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். முன்னுரிமை பதிவேட்டில் பதியப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் விவசாயிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். எனவே நடப்பு குறுவை பருவத்தில் நெல் நடவு செய்துள்ள விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி இடுபொருட்களை பெற்று பயன்பெறுமாறும், மேலும் விவரங்களுக்கு வட்டார வேளாண் உதவி இயக்குனர்களை அணுகவேண்டும். இத்தகவலை தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**காடுகளை அழிப்பதால் மழையளவு குறைகிறது வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேச்சு**

திருவில்லிபுத்தூர், : காடுகளை அழிப்பதால் மழையளவு குறைந்து வரு கிறது என இயற்கை வே ளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் கூறினார்.

அகில இந்திய விவசாயிகள் சங்கம் சார்பில் திருவில்லிபுத்தூரில் விவசாய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. விருதுநகர் மா வட்டத் தலைவர் குருசாமி தலைமை வகித்தார். திருவில்லிபுத்தூர் ஒன்றியச் செயலர் மூர்த்தி வரவேற் றார். கருத்தரங்கில் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசியதாவது:

விவசாயத்தில் இயற்கை வழிமுறைகளை பின்பற்றி னால் எந்த சிக்கலும் இல் லை. செலவும் இல்லை. நீலகிரியில் இருந்த ஏராள மான காடுகள் அழிக்கப்பட்டு, தற் போது தேயிலை தோட்ட ங்களாக மாற்றப்பட்டுள் ளன. இதனால் அங்கு மழை அளவு குறைந்துள்ளது. இந்தியாவில் கடந்த பல ஆண்டுகளுக்கு முன் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 23 சதவீத காடுகள் இருந்தன. ஆனால் தற்போது 11 சதவீத காடுகள் மட்டுமே உள்ளன. ஒரு நாட்டில் 33 சதவீத காடுகள் இருந்தால் தான் மழை அதிகம் பெய்யும்.

உணவு உற்பத்தி பாதித்து, தற்கொலை முடிவுக்குச் செல்லும் விவசாயிகளை பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண் டும். மனிதர்களையும், வீட் டில் வளர்க்கப்படும் கால்நடைகளையும் காட்டுக்குள் அனுமதிக்க வனத்துறையி னர் மறுக்கின்றனர். காடு களில் கால்நடைகளின் எச் சம் மூலம் அங்கு புதிய மரக்கன்றுகள் முளைக்கும். அத னால் அதிக மழை பொழியும். இவ்வாறு அவர் பேசினார்.

கருத்தரங்கில் விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலர் சண்முகம், விருதுநகர் மாவட்டச் செயலாளர் கள் சீனிவாசன் (தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்), ராமச்சந்திர ராஜா (தமிழக விவசாயிகள் சங்கம்), அரசியல் சார்பற்ற விவசாயிகள் சங்க நிர்வாகி சேதுசெல்லச்சாமி, திருவில்லிபுத்தூர் வட்டார விவசாயிகள் சங்கத் தலை வர் கிருஷ்ணன், மார்க்சிஸ்ட் மாவட்ட செயலர் அர்ச்சு ணன், நிர்வாகிகள் சசிகுமார், கணேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**குறைந்த விலையில் மக்காச்சோளம்**

விருத்தாசலம், : விருத்தாசலம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மக்காச்சோளம் மிகக்குறைந்த விலைக்கு விற்கப்படுவதால் பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர். கும்பகோணம் அடுத்த சோழபுரம் பகுதியில் அதிக அளவில் சோளம் பயிரிடப்படுகிறது. இவற்றை மினி லாரி யில் எடுத்து வந்து ரூ. 10க்கு 3 சோளக் கதிர்கள் என விற்பனை செய்யப்படுகிறது. குறைந்த விலையில் விற்கப்படும் மக்காச் சோளத்தை பொதுமக்கள் அதிக அளவில் வாங்கி செல்கின்றனர்.

**திருச்செங்கோட்டில் நடமாடும் மண் பரிசோதனை வாகன சேவை.**

திருச்செங்கோடு: விவசாயிகளுக்காக திருச்செங்கோட்டில் நடமாடும் மண் பரிசோதனை வாகன சேவை வழங்கப்படுகிறது.

இது குறித்து திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குநர் நமச்சிவாயம் கூறியது: திருச்செங்கோடு உழவர் சந்தையில் விவசாயிகளுக்கு, ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை நடமாடும் மண்பரிசோதனை வாகனம் மூலம், மண் பரிசோதனை, நீர் பரிசோதனை செய்து தரப்படுகிறது.

காலை 10 முதல் மாலை 6 மணிவரை விவசாயிகளிடம் நேரிடையாக மண் மற்றும் நீர் மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் வழங்கப்படுகின்றன. மண் மாதிரி பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள், நீர் மாதிரி ஆய்வு கட்டணமாக தலா ஸி20 செலுத்த வேண்டும். விவசாயிகள் மண்மாதிரி மற்றும் நீர் மாதிரி ஆய்வுக்கு வழங்கும்போது அவர்களது பெயர் மற்றும் முழு முகவரி, சர்வே எண், பயிர் சுழற்சி, சாகுபடி செய்யும் பயிர், பாசன விபரம் ஆகியவற்றை தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**பரமத்தி வேலூரில் ரசாயனத்தில் பழுக்க வைத்த 3 டன் மாம்பழம் அழிப்பு**

பரமத்தி வேலூர்: பரமத்தி வேலூரில் ரசாயனத்தில் பழுக்க வைக்கப்பட்ட 3 டன் மாம்பழத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்து அழித்தனர்.

பரமத்தி வேலூர் மீனவர் தெருவில் கார்பைட் கல் கொண்டு மாம்பழங்களை பழக்கவைப்பதாக நாமக்கல் மாவட்ட உணவு பாதுகாப்பு நிலைய அலுவலர் தமிழ் செல்வனுக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்த சம்பவ இடத்திற்கு உணவு பாதுகாப்பு படையினர் விரைந்துசென்றனர். அங்குள்ள 3 வீடுகளில் ரசாயனம் கொண்டு பழுக்கவைக்கத்த 3 டன் மாம்பழத்தை பறிமுதல் செய்தனர். மேலும் ரசாயனம் கொண்டு பழுக்க வைக்கும் மாம்பழத்தை உண்பதால் பொது மக்களுக்கு பல்வேறு பாதிப்பு ஏற்படுவ¬¬ எடுத்து கூறினர். இதற்கு மாற்றாக வேளாண் துறையினர்

அறிவுரை படி இயற்க்கை முறையிலேயே பழுக்க வைக்கவும் அறிவுறுத்தினர்.இதுபோல் மீண்டும் ரசாயனம் கொண்டு பழுக்க வைத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தனர். பறிமுதல் செய்த 3டன் மாம்பழத்தை வேலூர் பேரூராட்சி குப்பை கிடங்கில் கொட்டி அழித்தனர். இந்த ஆய்வின் போது பரமத்தி வேலூர் உணவு பாதுகாப்பு திட்ட அலுவலர் சிவ சண்முகம், பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் ராஜ கணபதி, ராஜா பாலமுருகன், சிவநேசன், செந்தில் மற்றும் பேரூராட்சி ஊழியர்கள் பலரும் உடனிருந்தனர்.

**தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசனத்திற்கு தண்ணீர் வழங்கினால் நீதிமன்றத்தில் வழக்கு**

கோபி,: காவிரி நதிநீர் ஆணையம் அனுமதித்த அளவை விட கூடுதலாக தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்திற்கு தண்ணீர் வழங்கினால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என்று கீழ்பவானி பாசன சங்க தலைவர் நல்லசாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கோபியில் கீழ்பவானி பாசன சங்க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட சங்கத்தலைவர் நல்லசாமி கூறியதாவது: கடந்த 28ம் தேதி தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. காவிரி நதிநீர் ஆணயைத்தின் தீர்ப்பில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்திற்கு 4.7 டி.எம்.சி தண்ணீர் வழங்க உத்தரவிட்டுள்ளது. ஆனால் இப்பாசனத்தில் உள்ள 24,500 ஏக்கரில் ஒரு போக சாகுபடிக்கு 11 டி.எம்.சி தண்ணீர் தேவை உள்ளது. நெல் பயிர் வளர்ந்து கதிர் பிடிக்கும் தருணத்திற்குள் 4.7 டி.எம்.சி. பயன்படுத்தப்பட்டு விடும்.

ஒரு போகத்திற்கு தேவையான தண்ணீரில் 4.7 டி.எம்.சி தண்ணீர் போக மீத முள்ள 6.3 டி.எம்.சி. தண் ணீரை காவிரி நதி நீர் ஆணையத்தின் தீர்ப்பிற்கு மாறாக வழங்கினால் கீழ்பவானி பாசன சங்க விவசாயிகளின் சார்பில் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்படும். கடந்த காலங்களில் பொதுப்பணித் துறையினரின் தவறான நீர் மேலாண்மையால் கீழ்பவ £னி பாசனத்தில் இதுவரை 8 போகம் நெல் சாகுபடியும், 15 போகம் கடலை சாகுபடியும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சுமார் 272 டி.எம்.சி தண்ணீர் வீணாகி உள்ளது. அதே போன்று கீழ்பவானி வாய்க்காலில் 1201 கோடி ரூபாயில் கான்கிரிட் தளம் அமைத்தால் லட்சக்கணக்கான மரங்கள் அழிக்கப்படுவதுடன், ஆயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்கள் முழுமையாக பாதிக்கப்படும்.

இந்த திட்டத்திற்காக செயல்படுத்த உள்ள தொகையை பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்ற பயன்படுத்த வேண்டும்.
இரு மாநில அரசுகளும் பேச்சுவார்த்தை மூலம் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். பாண்டி யாறு புன்னம்புழா திட்டத்தின் மூலம் ஆண்டிற்கு 18 டி.எம்.சி தண்ணீரை தமிழகம் பெற முடியும். அதே

நேரத்தில் அந்த அணையில் இருந்து கிடைக்கும் மின்சாரத்தினை கேரளா பயன்படுத்திக்கொள்ளும் வகையில் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அந்த திட்டம் நிறைவேற்றப்படும் போது பவானிசாகர் அணை ஆண்டு முழுவதும் நிரம்பி இருக்கும். மேலும் பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ள அத்திகடவு&அவினாசி திட்டமும் நிறைவேற்றப்பட்டு, அந்த திட்டத்திற்கும் ஆண்டிற்கு 4 டி.எம்.சி. தண்ணீர் வழங்க முடியும். இதனால் கூடுத லாக கோவை, திருப்பூர் மாவட்டமும் பயன்பெறும் என்றார். கூட்டத்தில், ஆடிட்டர் சோமசுந்தரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**அமைச்சர்கள் ஆய்வு கூட்ட அரங்கை முற்றுகையிட்ட விவசாயிகள்**

ஈரோடு, : தமிழக வருவாய்த்துறை அமைச்சரின் தொகுதிக்கு மட்டும் ரூ.18 கோடி வறட்சி நிவாரணம் ஒதுக்கியதைக் கண்டித்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஈரோட்டில் அமைச்சர்கள் ஆய்வு கூட்டம் நடத்திய அரங்கை முற்றுகையிட்டனர். கடந்தாண்டு பருவமழை பொய்த்ததால் வறட்சி ஏற்ப ட்டு ஈரோட்டில் பல்வேறு பாசன விவசாயிகள் பாதித்தனர். பாதிக்கப்பட்ட 25 ஆயிரத்து 750 விவசாயிகளுக்கு ரூ.25 கோடியே 27 லட்சத்து 26 ஆயிரம் நிதியை தமிழக அரசு வறட்சி நிவாரணமாக ஒதுக்கியது.இதில் வருவாய்த்துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் தொகுதியான பெருந்துறைக்கு மட்டும் ரூ.18 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. பிற தொகுதிகளுக்கு சொற்ப தொகை மட்டும் ஒதுக்கப்பட்டதால் இதில் முறைகேடு நடந்ததாக விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டது. இதில் காஞ்சிக்கோவில் வி.ஏ.ஓ., மற்றும் உதவியாளர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். இந்நிலையில் நேற்று ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் பொதுப்பணித்துறை அமைச்சர் ராமலிங்கம், வருவாய்த்துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் தலைமையில் ஆய்வு கூட்டம் நடந்தது. அப்போது நம்பியூர் கிராம பகுதியைசேர்ந்த 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கூட்ட அரங்கை முற்றுகையிட்டு தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், 'ஈரோடு மாவட்டத்தில் வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு ரூ.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இதில் அமைச்சர் தோப்பு வெங்கடாசலத்தின் பெருந்துறை தொகுதிக்கு மட்டும் ரூ.18 கோடி ஒதுக்கினர். இந்த தொகையும் உண்மையான விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. பிற தொகுதிகளுக்கு குறைந்த அளவு நிதி ஒதுக்கினர். ஆனால், நம்பியூர், வெள்ளாளபாளையம், கொன் னமடை, மொட் டணம் உள்ளிட்ட கிராம விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவில்லை' என்றனர். போலீசார் உடனடியாக விரைந்து வந்து விவசாயிகளை அப்புறப்படுத்தினர். ஆய்வு கூட்டம்

முடிந்த பின், அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், ராமலிங்கம் ஆகியோரிடம் விவசாயிகள் மனு அளித்தனர். அப்போது, நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக கூறி விட்டு சென்று விட்டனர்.

**தடை செய்த கத்தி மூலம் பசுந்தேயிலை அறுவடை அதிகாரி எச்சரிக்கை**

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் 63 ஆயிரம் சிறு, குறு தேயிலை விவசாயிகள் உள்ளனர். இந்த மாவட்டத்தின் பொருளாதார முதுகெலும்பாக விளங்கி வரும் தேயிலைக்கு உரிய விலை கிடைக்கவில்லை என கூறி விவசாயிகள் பல்வேறு போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.இதைதொடர்ந்து, மத்திய அரசு சார்பில் விலை பகிர்வு திட்டம் அமல்படுத்தப்பட்டது. மேலும், தரமான பசுந்தேயிலை உற்பத்தி செய்ய வலியுறுத்தி தேயிலை வாரியம் சார்பில் மாவட்டம் முழுவதும் உள்ள கிராமங்களில் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

மேலும், கத்தியால் பசுந்தேயிலையை அறுவடை செய்வதால் தேயிலை தரம் பாதிக்கப்படுவதாக புகார் எழுந்ததை தொடர்ந்து தேயிலை வாரியம் இதற்கு தடை விதித்துள்ளது. இருப்பினும் குன்னூர் சுற்றுவட்டார பகுதிகளில் ஒருசில விவசாயிகள் உரிய நேரத்தில் பசுந்தேயிலையை அறுவடை செய்யாமல் முற்றிய இலைகளை கத்தி மூலம் அறுவடை செய்வதால் தேயிலை தரம் கேள்விக்குறியாக மாறியுள்ளது.

இதுகுறித்து தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் கூறும்போது, இம்மாவட்டத்தில் தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், குறித்த நேரத்தில் பசுந்தேயிலை அறுவடை செய்ய கத்திரி, இலை பறிக்கும் இயந்திரம் ஆகியவை மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதனை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்த வேண்டும். கத்தி மூலம் அறுவடை செய்யப்படும் பசுந்தேயிலையை, தொழிற்சாலைகளில் வாங்க கூடாது என எச்சரித்து உள்ளோம். இதுபற்றி தேயிலை வாரிய அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர் என்றார்.

**கூட்டுறவு தொழிற்சாலையில் பசுந்தேயிலை கொள்முதலுக்கு எலக்ட்ரானிக் தராசு**

மஞ்சூர், : விவசாயிகளிடமிருந்து பசுந்தேயிலை கொள்முதல் செய்ய கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு அரசு மானியத்துடன் எலக்ட் ரானிக் எடை தராசு வழங்கப்படும் என எம்.எல்.ஏ புத்திசந்திரன் தெரிவித்தார்.

மஞ்சூர் அருகே உள்ள எடக்காட்டில் குந்தா கூட் டுறவு தேயிலை தொழிற் சாலை இயங்கி வருகிறது. மாவட்டத்தில் துவங்கப்பட்ட முதல் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை யான இதில் எடக்காடு சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்து சுமார் 2 ஆயிரம் விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். சமீபத்தில் இத்தொழிற்சாலையின் 50ம் ஆண்டு பொன்விழா தமி ழக முதல்வர்

ஜெயலலிதா தலைமையில் நடைபெற் றது.இந்நிலையில், குந்தா கூட்டுறவு தேயிலை தொழிற் சாலை தற்போது லாபத்தில் இயங்கி வருகிறது. இதையடுத்து, தொழிற்சாலையில் அங்கத்தினர்களாக உள்ள விவசாயிகளுக்கு லாபத்தில் பங்கு தொகை (டிவிடென்ட்) வழங்க தொழிற்சாலை நிர்வாகம் தரப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கான விழா குந்தா கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு தொழிற்சாலை நிர்வாக குழு தலைவர் சகாதேவன் தலைமை தாங்கினார். இன்ட்கோ சர்வ் சேர்மன் சிவக்குமார், இணை இயக்குநர் சாமிநாதன், பிக்கட்டி பேரூராட்சி தலைவர் ஜெய மணி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். நிர்வாக குழு துணை தலைவர் போஸ் வரவேற்றார். விழாவில் எம்.எல்.ஏ.புத்திசந்திரன், தொழிற்சாலை அங்கத்தினருக்கு லாபத்தில் பங்கு தொகையான ரூ.5லட் சத்தை வழங்கினார். மேலும் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் 10 மற்றும் 12ம் வகுப்பு பொது தேர்வுகளில் முதல் மூன்று இடங்களை பிடித்த கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை அங்கத்தினர்களின் குழந்தைகளுக்கு ரொக்க பரிசுகளையும் வழங்கினார். இதை தொடர்ந்து எம்.எல்.ஏ.புத்திசந்திரன் பேசியதாவது: கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் தற்போது விவசாயிகளிடமிருந்து பசுந்தேயிலை கொள்முதல் செய்ய, வில் தராசு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த தராசு மூலம் பசுந்தேயிலை கொள்முதல் செய்வதில் பல்வேறு குளறு படிகள் ஏற்படுவதாக விவ சாய அங்கத்தினர்கள் தரப் பில் கூறப்படுகிறது. இதை தவிர்க்கும் நடவடிக்கையாக மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கும் பசுந்தேயிலை கொள்முதல் செய்ய எலக்ட்ரானிக் எடை தராசு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த எலக்ட்ரானிக் தராசு மூலம் பசுந்தேயிலை எடையிட்டவுடன் உடனடியாக விவசாயிகளுக்கு தங்கள் விநியோகித்த பசுந்தேயிலைக்கான ரசீது வழங்கப்படும். மேலும், ஜி.பி.ஆர்.எஸ் தொழில்நுட்பத்துடன் ஆன்லைன் மூலம் சம்பந்தபட்ட கூட்டுறவு தொழிற்சாலைகளில் உள்ள கம்ப்யூட்டரில் விவசாயிகள் விநியோகித்த பசுந்தேயிலை குறித்த விவரங்கள் பதிவு செய்யப்படும். இதன் மூலம் பசுந்தேயிலை கொள்முதலில் உள்ள குளறுபடிகள் களையப்படும். முதற்கட்ட மாக குந்தா பகுதியில் உள்ள மஞ்சூர், குந்தா, பிக்கட்டி, கிண்ணக்கொரை, மேற்கு நாடு, மகாலிங்கா, மற்றும் இத்தலார் உள்ளிட்ட 7 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு எலக்ட்ரானிக்ஸ் தராசு வழங்கப்படும். தொடர்ந்து அனைத்து கூட்டுறவு தொழிற்சாலைகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த எலக்ட்ரானிக்ஸ் தராசு முற்றிலும் 100 சதவீதம் தமிழக அரசின் மானியத்தோடு வழங்கப்படுகிறது என கூறினார். விழாவில் அதிமுக இளைஞரணி இணை செயலாளர் மணியரசன், மஞ்சூர் கூட்டுறவு தொழிற்சாலை நிர்வாக குழு உறுப்பினர் நஞ்சுண்டன், மணியட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் சிவக்குமார், அண்ணா தொழிற்சங்க நிர்வாகிகள் சந்திரன், கோபாலன்

உள்பட ஏராளமனோர் கலந்து கொண்டார்கள். முடிவில் நிர்வாககுழு உறுப்பினர் தர்மராஜ் நன்றி கூறினார்.

**வி.வி.சர்க்கரை ஆலையின் சிறப்பு அரவை இன்று துவக்கம்**

வேப்பந்தட்டை: வேப்பந்தட்டை தாலுகா உடும்பியத்தில் உள்ள வி.வி.சர்க்கரை ஆலையின் சிறப்பு கரும்பு அரவை துவக்க விழா ஆலை வளாகத்தில் இன்று (11ம் தேதி) நடக்கிறது. இதுகுறித்து ஆலை நிர்வாக இயக்குனர் தெரிவித்துள்ளதாவது: வேப்பந்தட்டை தாலுகா உடும்பியத்தில் இயங்கி வந்த தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலை கடந்த ஜூலை முதல் வாரம் முதல் திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் வி.வி.மினரல்ஸ் நிறுவனத்தாரால் வாங்கப்பட்டு வி.வி. சர்க்கரை ஆலை என பெயர் மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகிறது. இந்த புதிய ஆலையின் சிறப்பு கரும்பு அரவை துவக்க விழா ஆலை வளாகத்தில் இன்று நடைபெறுகிறது. வி.வி. சர்க்கரை ஆலையின் சிறப்பு அரவை இன்று தொடங்கி சுமார் ஒன்றரை மாதம் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஆலைக்கு கரும்பு வெட்டி அனுப்பவும், விவசாயிகள் கரும்பு வெட்டும் தொழிலாளர்கள், வாகன உரிமையாளர்களுக்கு கரும்பு வெட்டிய ஒரு வாரத்திற்குள் பணம் பட்டுவாடா செய்ய திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இந்த ஆலைக்குஉட்பட்ட அனைத்து கோட்ட கரும்பு விவசாய பிரதிநிதிகள் மற்றும் வி.வி. மினரல்ஸ் தலைமை நிர்வாகிகள், அலுவலர்கள் கரும்பு அரவை நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர். மேலும் கடந்த 8ம் தேதி நடந்த பாயிலர் இளம் சூடேற்றும் நிகழ்ச்சியில் ஆலையின் செயல் இயக்குனர் பிரான்சிஸ், துணை பொதுமேலாளர்கள் புண்ணியமூர்த்தி, வின்சென்ட், முதுநிலை மேலாளர் நாசர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

**25 % உர செலவை குறைக்க அசோஸ்பயிரிலம் இடுங்கள் வேளாண் அதிகாரி அறிவுரை**

சேதுபாவாசத்திரம்: மண் வளம் காக்க, 25 சத வீதம் உரச்செலவை குறைக்க அசோஸ்பயிரிலம் நுண்ணு யிரை பயிர்களுக்கு இடவேண்டும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண் இயக்குநர் பெரியசாமி, வேளாண் அலுவலர் மதியரசன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: அசோஸ்பயிரிலம் நுண்ணுயிர் ஒரு பாக்டீரியா வகையை சார்ந்தது. இது வளர்வதற்கு மிகக்குறைந்த அளவு காற்று போதுமானது. காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து பயிர்களுக்கு அளிக்கிறது. நெல் மற்றும் பிற தானிய பயிர்களின் வேர் மண்டலத்தில் இணைந்து வாழும் நுண்ணுயிர். அசோஸ்பயிரிலம் நுண்ணு யிரியை நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, பனிவரகு,

தினை, சாமை, குதிரைவாலி போன்ற தானிய பயிர்களுக் கும், பருத்தி, சூரியகாந்தி மற்றும் கரும்பு போன்ற இதர பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். விதை நேர்த்தி செய்ய ஒரு பொட்டலமும் (200 கிராம்), நாற்றுவிட்டு நடவு செய்யும் பயிர்களுக்கு நாற்றின் வேர்களை நனைக்க 2 பொட்டலமும் (400 கிராம்), நடவு வயல் அல்லது நேரடி விதைப்பு செய்யும் நிலத்திற்கு ஏக்கருக்கு 4 பொட்டலமும் (800 கிராம்) வீதம் பயன்படுத்த வேண்டும். இந்த நுண் ணுயிர் பயன்படுத்துவதால் ரசாயன தழைச்சத்து உரம் இடுவதில் 25 சதவீதத்தை குறைத்து கொள்ளலாம். தாவர வளர்ச்சி ஊக்கிகளை வேர் மண்டலத்தில் உண்டாக்குவதால் பயிரின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது. பயிர்களின் மகசூல் அதிகரிப்பதுடன் மண் வளம் பாதுகாக்கப்படுகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**ராமநாதபுரம் மாவட்டத்தில் 2 ஆயிரம் மெட்ரிக் டன் விதை விநியோகிக்க திட்டம்**

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டு 2 ஆயிரத்து 250 மெட்ரிக் டன் தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோ கம் செய்ய

வேளாண்மை துறை திட்டமிட்டுள்ளது.
மாவட்டத்தில் விதை விற்பனையாளர்களுக்கான பயிற்சி ராமநாதபுரத்தில் நடந்தது. இதில் வேளாண்மைதுறை துணை இயக்குனர் அரிவாசன் பேசுகையில்,

Ôராமநாதபுரம் மாவட்டத்தில் 1 லட்சத்து 30 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. தரமான சான்று விதைகளே நெல் உற்பத்திக்கு

ஆதாரமாக அமைகிறது. மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் நெல் பயிர் அனைத்துக்கும் தேவையான சான்று விதைகளுக்கு மானியம் வழங்கிட அரசு அறிவுரை

வழங்கியுள்ளது.
தேசிய உணவு பாதுகாப்பு இயக்க திட்டத்தின்கீழ் நெல் சான்று விதை விநியோக திட்டத்திற்கு கிலோ ஒன்றிற்கு ரூ.5 மானியம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில்

வேளாண்மைத்துறை மூலம் 400 மெ.டன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் மூலம் 250 மெ.டன், தனியார் விதை விற்பனையாளர்கள் மூலம்

1600 மெ.டன் உள்ளிட்ட மொத்தம் 2 ஆயிரத்து 250 மெ.டன் விதைகள் இம் மாவட்ட விவசாயிகளுக்கு விநியோ கம் செய்ய வேளாண்மை துறை திட்டமிட்டுள்ளது.
தனியார் விதை விற்பனையாளர்கள் விதை விநியோகத்தில் முக்கிய பங்கு வகிப்பதால் மாவட்டத்தில் உள்ள அனைத்து விதை விற்பனையாளர்களுக்கும்

வேளாண்மைதுறை சார்பில் விற்பனை குறித்து பயிற்சி அளிக்க வேளாண்மை இணை இயக்கு னர் சக்திமோகன் அறிவுரைப்படி அனைத்து விதை

விற்பனையாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள் ளது. இதனால் வேளாண்மைத்துறையின் மூலம் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் மானியம் வழங்க

விதை விற்பனையாளர்கள் நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என தெரிவித் தார்.
விதை ஆய்வு துணை இயக்குனர் மணிமாறன், வேளாண்மை உதவி இயக்குனர் சேக்அப்துல்லா, விதை ஆய்வாளர் மருதுபாண்டியன், வேளாண்மை அலுவலர்கள்

கோபாலகிருஷ்ணன், நாகராஜன் ஆகியோர் பேசினார்.

**கொடுமுடியாறு அணை திறப்பு விவசாயிகள் மகிழ்ச்சி**

வள்ளியூர்: தினகரன் செய்தி எதிரொலி யாக வள்ளியூர் பகுதி குளங்களுக்கு கொடுமுடியாறு அணை பாசனத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வள்ளியூர் பகுதியில் நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டை போக்கவும், பாசன வசதிக்காகவும் கொடுமுடியாறு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட விவசாயிகள் கோரிக் கை விடுத்து வந்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட் டது. மேலும் வள்ளியூர் வியாபாரிகள் சங்கம் சார்பில் அரசுக்கும் மனு அனுப்பப்பட் டது. இதுகுறித்து தினகரன் நாளிதழ் செய்தி வெளி யானது. இதன் எதிரொலியாக நேற்று முன்தினம் கொடுமுடியாறு அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. ராதாபுரம் எம்எல்ஏ மைகல்கேல் ராயப்பன் அணையை திறந்து வைத் தார். மாவட்ட பஞ்சாயத்து தலைவர் நாராயண பெரு மாள், ராதாபுரம் ஒன்றிய இளைஞரணி செயலாளர் முருகேசன். தெற்கு வள்ளி யூர் பஞ்சாயத்து தலைவர் இன்பம், ராதாபுரம் தொகுதி அதிமுக செயலாளர் பால்துரை,

பொறியாளர்கள் ஜவகர், ஆதிமுலம் ஆகி யோர் கலந்து கொண்டனர். 56 அடி கொள்ளளவு கொண்ட கொடுமுடியாறு அணையில் தற்போது 46 அடி நீர்மட்டம் உள்ளது. அணையிலிருந்து 70 ரீச் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. 30ரீச் படலையார் குளம் கால்வாய்கஃகும், 30 ரீச் வள்ளியூரான் கால்வாய்கஃகும், 10 ரீச் நம்பியாறு கால்வாய்கஃகும் திறந்து விடப்படுகிறது.

வருகிற 21ஆம் தேதி வரை தண்ணீர் திறந்து விடப்படுவதால் வள்ளியூர் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளதுடன், விவசாய பணிகளில் மும் முரம் காட்ட தொடங்கியுள்ளனர். கிணறுகளில் நீர்மட்டம் உயரும் என்பதால் குடிநீர் தட்டுப்பாடு நீங்கும்.

**மழையால் விளைச்சல் பாதிப்பு 50 லட்சம் டன் கோதுமை இறக்குமதி செய்ய சீனா திட்டம்**



பீஜிங்,

உலகில் அதிக கோதுமை விளைவிக்கும் நாடாக சீனா விளங்குகிறது. இருப்பினும் இந்த ஆண்டில் பெய்த பலத்த மழை காரணமாக கோதுமை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டு விட்டது. எனவே 2013–14–ம் ஆண்டில் 35 லட்சம் டன் கோதுமையை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய இலக்கு நிர்ணயித்தது.

ஆனால் மழை நீடிக்கும் என அஞ்சப்படுவதால் கோதுமை இறக்குமதியை 50 லட்சம் டன்னாக உயர்த்த தற்போது சீனா தேசிய தானியம் ம?ற்றும் எண்ணெய் துறை முடிவு செய்துள்ளது. அதில் அமெரிக்காவில் இருந்து ஜுலை மாதத்தில் 13 லட்சம் டன் கோதுமை வாங்க இருக்கிறார்கள்.

**ஏலகிரியில் குளு குளு சீசன் வேலூர் மாவட்டத்தில் இதமான காலநிலை அதிகப்பட்சமாக காவேரிப்பாக்கத்தில் 29 மில்லிமீட்டர் மழைபதிவு**

வேலூர்

வேலூர் மாவட்டத்தில் அதிகப்பட்சமாக காவேரிப்பாக்கத்தில் 29 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது.

குளுகுளு சீசன்

வேலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மாலை வேளைகளில் குளிர்ந்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலையில் வேலூர், ஆற்காடு, காவேரிப்பாக்கம், வாலாஜா உள்பட பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது.

இரவு முழுவதும் பெய்த மழை காரணமாக வேலூர் மாவட்டத்தில் நேற்று இதமான காலநிலை காணப்பட்டது. அவ்வப்போது குளிர்ந்த காற்று வீசியது. வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. வேலூர் மாவட்டத்தின் சுற்றுலா ஸ்தலமான ஏலகிரியில் குளு குளு சீசன் காணப்பட்டது.

அங்கு சாரலுடன் கூடிய மழை பெய்தது. இதனால் அங்கு செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது.

<u>மழையளவு</u>

நேற்று முன்தினம் இரவு பெய்த மழையளவுப்படி, அதிகப்பட்சமாக காவேரிப்பாக்கத்தில் 29.40 மில்லிமீட்டர் மழைபதிவானது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பதிவான மழையளவு(மில்லிமீட்டரில்) வருமாறு:–

வேலூர்–22.60.

சோளிங்கர்–21.

ஆற்காடு–15.80

அரக்கோணம்–14.20

வாலாஜா–10.60

ஆம்பூர்–7.30

திருப்பத்தூர்–5

மேலாத்தூர்–1.40

குடியாத்தம்–1.40

ஆலங்காயம்–1.30

மாவட்டம் முழுவதும் மொத்தம் 130 மில்லிமீட்டர் மழைபதிவாகியுள்ளது. சராசரியாக 10.83 மில்லிமீட்டர் மழைபதிவாகியுள்ளது. வேலூர் கிழக்கு மாவட்ட பகுதிகளில் மிதமான அளவு மழை பெய்துள்ளது.

நிலத்தடி நீர் மட்டம் உயர்வு?

மழை காரணமாக நிலத்தடி நீர் மட்டம் உயர்வதற்கு வாய்ப்புகள் உள்ளதா என்பது குறித்து அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது:–

வேலூர் மாவட்டத்தில் 20–க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துகளில் 100 சதவீதம் அளவிற்கு நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு வருவதாக சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. இதனை தொடர்ந்து மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீரை சேமிக்கும் வகையில் வீடுகள், அலுவலகங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களில் சராசரியாக 20 சதவீதம் அளவிற்கு மழை பெய்துள்ளது. இது நிலத்தடி நீரை சேமிக்க போதுமானது அல்ல. இருப்பினும் மக்கள் மழைநீரை பூமிக்குள் கொண்டு செல்லும் வகையில் மழைநீர் சேகரிப்பு அமைப்பை செயல்படுத்தினால், அபாயகரத்தை எட்டியுள்ள நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

**சுற்றுச்சூழல், இலக்கியம், வேளாண்மை துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது எஸ்.கே.பி.என்ஜினீயரிங் கல்லூரி தலைவர் கருணாநிதி பேச்சு**

திருவண்ணாமலை,

சுற்றுச்சூழல், இலக்கி யம், வேளாண்மை, தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குபவர் களுக்கு வாழ்நாள் சாத னையாளர் விருது வழங் கப்படும் என்று எஸ்.கே.பி.என்ஜினீயரிங் கல்லூரி தலைவர் கு.கருணாநிதி கூறினார்.

இ-மெயிலை கண்டுபிடித்தார்

விருதுநகர் மாவட்டம் ராஜ பாளையத்தை சேர்ந்தவர் அய்யாத்துரை. இவர் குடும் பத்துடன் அமெரிக்காவில் வசித்து வருகிறார். இவருடைய மகன் சிவா அய்யாத்துரை. இவர் தனது 7-வது வயதில் அமெரிக்காவிற்கு சென்றார்.

அங்கு தனது 14-வது வயதில் அதாவது 1978-ம் ஆண்டு இ-மெயிலை கண்டுபிடித்துள் ளார். இதற்கு 1980-ல் காப் புரிமம் வாங்கியதாகவும் கூறுகிறார்.

வாழ்நாள் சாதனையாளர் விருது

இ-மெயிலை கண்டுபிடித்த வர் ஒரு தமிழர் என்பதால் அவரை கவுரவிக்கும் வகை யில் திருவண்ணாமலை எஸ்.கே.பி.என்ஜினீயரிங் கல்லூரியில் அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

இதற்கான விழா நேற்று கல்லூரி அரங்கத்தில் நடந்தது. விழாவுக்கு கல்லூரி தலைவர் கு.கருணாநிதி தலைமை தாங்கினார். முதல்வர் எஸ்.பாலசுப்பிரமணியன் வரவேற் றார்.

ரூ.1 லட்சம் பரிசு

கல்லூரி செயலாளர் ஆர்.குப்புசாமி, இயக்குனர் ஆர்.செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இ-மெயிலை கண்டுபிடித்த சிவா அய்யாத்துரைக்கு எஸ்.கே.பி.என்ஜினீயரிங் கல்லூரி சார்பில் வாழ்நாள் சாதனையாளர் விருது மற்றும் ரூ.1 லட்சம் பரிசுத்தொகையை கல்லூரி தலைவர் கு.கருணா நிதி வழங்கி பேசினார்.

அவர் பேசியதாவது:-

எஸ்.கே.பி. என்ஜினீயரிங் கல்லூரி சார்பில் சாதனை யாளர்களை கண்டுபிடித்து அவர்களுக்கு வாழ்நாள் சாத னையாளர் விருதை வழங்கி வருகிறது. அதன்படி உலகில் உள்ள அனைத்து மக்களும் பயன்படுத்தக்கூடிய மிகப் பெரிய சாதனையான இ-மெயிலை கண்டுபிடித்த தமிழ் நாட்டை சேர்ந்த சிவா அய் யாத்துரைக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங் கப்படுகிறது.

சுற்றுச்சூழல், இலக்கியம்

தொடர்ந்து வேளாண்மை, சுற்றுச்சூழல், இலக்கியம், தொழில்நுட்பம் ஆகிய துறை களில் சாதனை படைப்பவர் களை கண்டறிந்து அவர்க ளுக்கு வாழ்நாள் சாதனை யாளர் விருதுகள் வழங்கப் படும்.மேற்கண்டவாறு அவர் பேசினார்.சிவாவின் தந்தை அய்யாத் துரையும் விழாவில் கலந்து கொண்டார். முடிவில் எஸ்.கே.பி தொழில்நுட்ப கல் லூரி முதல்வர் செந்தில் குமார் நன்றி கூறினார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 63 அடியாக உயர்வு நந்தி சிலை கழுத்து வரை தண்ணீரில் மூழ்கியது**

மேட்டூர் அணை நீர்மட்டம் 63 அடியாக உயர்ந்தது. இதனால் வெளியே தெரிந்த நந்தி சிலை தற்போது கழுத்து வரை தண்ணீரில் மூழ்கி உள்ளது.

கர்நாடகாவில் மழை

கர்நாடக மாநிலத்தில் மழை தீவிரமடைந்ததின் காரணமாக அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் ஆகிய அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இவ்வாறு திறந்து

விடப்படும் தண்ணீர் கர்நாடக அணைகளுக்கு வரும் நீர்வரத்தை பொறுத்து அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ செய்யப்படுகிறது.

இதன் அடிப்படையில் கடந்த வாரம் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து அதிகபட்சமாக வினாடிக்கு 50 ஆயிரம் கனஅடி வரை தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் தமிழக–கர்நாடக எல்லை பகுதியான பிலிகுண்டுலுவை கடந்து மேட்டூர் அணையை வந்தடைந்தது.

<u>நீர்வரத்து குறைந்தது</u>

இந்த நீர்வரத்தின் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் மளமளவென உயர்ந்து வந்தது. இந்த நிலையில் கடந்த 2 தினங்களாக கர்நாடக மாநிலத்தில் மழை குறைந்ததின் காரணமாக அங்குள்ள அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் நேற்று முதல் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக குறைந்து வருகிறது. இதனால் வேகமாக உயர்ந்து வந்த அணையின் நீர்மட்டம் தற்போது மெதுவாக உயர்ந்து வருகிறது. நேற்று காலை அணைக்கு வினாடிக்கு 33 கனஅடி வீதம் வந்து கொண்டிருந்த தண்ணீர் நேற்று மாலை வினாடிக்கு 22 ஆயிரம் கனஅடியாக குறைந்து விட்டது.

<u>நீர்மட்டம் 63 அடி</u>

இருந்தபோதும் நேற்று முன்தினம் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகமாக இருந்ததால், அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்தது. அதாவது நேற்று முன்தினம் மாலை 60 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 63 அடியாக உயர்ந்தது.

இதற்கிடையே, அணையின் நீர்த்தேக்கப்பகுதியான பண்ணவாடியில் நீர்மட்டம் குறைந்தபோது வெளியே தெரிந்த நந்தி சிலை தற்போது கழுத்து வரை தண்ணீரில் மூழ்கி உள்ளது. அங்குள்ள கிறிஸ்தவ இரட்டை கோபுரமும் தண்ணீரில் மூழ்கி வருகிறது. அணையின் நீர்மட்டம் 65 அடியை எட்டும்போது நந்தி சிலை முழுவதுமாக தண்ணீரில் மூழ்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

மேட்டூர் அணை நீர்மட்டம் 63 அடியாக உயர்ந்ததால், அணை நீர்த்தேக்க பகுதியான பண்ணவாடியில் நந்தி சிலை கழுத்து வரை தண்ணீரில் மூழ்கியிருக்கும் காட்சி.

**கோபி அருகே நாற்றங்கால் அமைக்கும் பணியில் ஈடுபட்ட வேளாண்மை பல்கலைக்கழக மாணவிகள் திருந்திய நெல் சாகுபடி குறித்து விளக்கம்**

கோபி அருகே நாற்றாங்கால் அமைக்கும் பணியில் கோவை வேளாண்மை பல்கலைக்கழக மாணவிகள் ஈடுபட்டனர். மேலும், திருந்திய நெல் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.

பல்கலைக்கழக மாணவிகள்

கோபிசெட்டிபாளையத்தில் தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்கள் மூலம் 24 ஆயிரத்து 504 ஏக்கர் பரப்பளவிலான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த வாய்க்கால்களில் முதல் போக நெல் சாகுபடிக்காக கடந்த மாதம் 28–ந் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

10 மாதங்களுக்கு பிறகு வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடப்பட்டதால் நெல் சாகுபடி பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். அதன்படி வயல்களில் உழவு செய்தல், நாற்றாங்கால் அமைத்தல், விதைநெல் தூவுதல் ஆகிய பணிகளை விவசாயிகள் மேற்கொண்டு உள்ளனர்.

நாற்றாங்கால் அமைத்தனர்

இந்த நிலையில் கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டு படிக்கும் மாணவிகள் பரணி, சிசிலியாகார்மல், பிரியங்கா, ராகவி, தரணிபிரியா, இந்துமீனா, லூலூகேகே ஆகிய 7 பேர் களப்பணி பயிற்சிக்காக கோபிசெட்டிபாளையத்திற்கு வந்து உள்ளனர்.

இந்த மாணவிகள் 7 பேரும் கோபி அருகே செய்யாம்பாளையம் தடப்பள்ளி பாசன பகுதிகளில் விவசாயிகளை சந்தித்து பேசினார்கள். அதைத்தொடர்ந்து, விவசாயி ஒருவரின் வயலில் இறங்கி மேட்டுப்பாத்தி நாற்றாங்கால் அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். மேலும், விவசாயிகள் கலந்து வைத்து இருந்த உரங்களை எடுத்து வயல்களில் இட்டனர்.

விவசாயிகளுக்கு விளக்கம்

பிறகு, திருந்திய நெல் சாகுபடி முறைகள் குறித்தும், அவற்றின் நன்மைகள், சாதாரண நெல் நடவுக்கும், திருந்திய நெல் நடவுக்கும் உள்ள வேறுபாடுகள் ஆகியவை குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர். சாதாரண முறையில் நெல் நடவு செய்யும்போது விதைநெல் கூடுதலாக தேவைப்படுகிறது. ஆனால், திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் நடவு செய்யும்போது குறைந்த அளவு விதை நெல்லே போதுமானது.

சாதாரண நெல் நடவு முறையை காட்டிலும் திருந்திய நெல் நடவு முறையில் 20 முதல் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கிறது. மேலும், பூச்சி நோய் தாக்குதல், எலிகளின் தொல்லை ஆகியவை குறைகிறது என்று விவசாயிகளுக்கு மாணவிகள் விளக்கம் அளித்தனர். அப்போது, கோபிசெட்டிபாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி மற்றும் விவசாயிகள் உடன் இருந்தனர்.

**பெருந்துறை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை தேங்காய் ரூ.25 லட்சத்துக்கு ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.25 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம் போனது.

<u>கொப்பரை தேங்காய்</u>

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது. மொத்தம் 1,183 மூட்டைகள் (58 ஆயிரம் கிலோ) கொப்பரை தேங்காய் கொண்டு வரப்பட்டு இருந்தது.

இதில் முதல் தரம் கிலோ 44 ரூபாய் 55 காசு முதல் 46 ரூபாய் 10 காசு வரையும், இரண்டாம் தரம் 34 ரூபாய் 15 காசு முதல் 43 ரூபாய் 75 காசு வரையும் ஏலம் போனது.

<u>ரூ.25 லட்சத்துக்கு ஏலம்</u>

இன்று நடந்த ஏலத்தில் கொப்பரை தேங்காய் மொத்தம் ரூ.25 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டது.

கொப்பரை தேங்காய் கடந்த வாரத்தை விட இந்த வாரம் ஒரு ரூபாய் குறைவாக விற்றது. தேங்காய் எண்ணையின் விலை குறைந்ததே கொப்பரை தேங்காயின் விலை வீழ்ச்சிக்கு காரணம் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**கோவை கொடிசியா அரங்கில் நவீன தொழில்நுட்ப கருவிகளுடன், விவசாய கண்காட்சி தொடங்கியது**

கோவை கொடிசியாவில் நவீன தொழில்நுட்ப கருவிகளுடன் சர்வதேச விவசாய கண்காட்சிதொடங்கியது. வெளிநாட்டு, மற்றும் உள்நாட்டு விவசாய கருவிகளை விவசாயிகள் பார்வையிட்டனர்.

<u>'அக்ரி இன்டெக்ஸ்' கண்காட்சி</u>

கோவை கொடிசியா சார்பில் 'அக்ரிஇன்டெக்ஸ்–2013' என்ற விவசாய கண்காட்சியின் தொடக்க விழா நேற்று நடைபெற்றது. கொடிசியா தலைவர் ஆர்.ராமச்சந்திரன் வரவேற்று பேசினார். கண்காட்சி சேர்மன் பி.வி.ஹரிகிருஷ்ணா வரவேற்று பேசினார். தென் இந்தியாவின் பெரிய

அளவிலான இந்த கண்காட்சியை வேளாண்மைத்துறை அமைச்சர் எஸ்.தாமோதரன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். விழாவில் அமைச்சர் தாமோதரன் பேசும்போது கூறியதாவது:–

எந்திரமயமான விவசாயம்

வேளாண்மைத்துறையின் வளர்ச்சிக்கு உதவும் வகையிலான இந்த கண்காட்சியை தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். விவசாயத்துறையில் எந்திரமயமாக்கல் முக்கியமான ஒன்றாகி விட்டது. ஆட்கள் பற்றாக்குறை உள்பட பல்வேறு பிரச்சினைகள் விவசாயத்தில் உள்ளன. இந்தியாவில் 30 கோடியாக இருந்த மக்கள் தொகை 130 கோடியாக உயர்ந்துள்ளது. எனவே அனைவருக்கும் உணவு அளிக்கப்பட வேண்டிய பொறுப்பு உள்ளது. இறக்குமதியால் மட்டும் உணவு பிரச்சினையை தீர்த்து விட முடியாது. நமது சொந்த மண்ணில் உணவு உற்பத்தியை பெருக்குவது அவசியம் ஆகும். தமிழக முதல்–அமைச்சர், விவசாயிகளின் சிரமத்தை அறிந்து பல்வேறு உதவிகளை செய்து வருகிறார்.

ரூ.1,300 கோடி உதவி

காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருந்தபோது, இந்தியாவில் யாரும் வழங்காத அளவுக்கு ரூ.1300 கோடியை, 20 லட்சம் குடும்பங்களுக்கு வழங்கி உதவி செய்தார். காவிரி பாசன பகுதியில் 1 லட்சம் ஏக்கர் நிலங்களில் மோட்டார் மூலம் மட்டுமே தண்ணீர் பாய்ச்சும் நிலைமை இருந்தது. எனவே அந்த பகுதியில் 12 மணிநேரம் தொடர்ந்து மின்சாரம் வழங்கவும், விவசாயத்துக்கு தேவையான இடுபொருட்களை இலவசமாக வழங்கவும் தமிழக முதல்–அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டார். தமிழ்நாட்டில் 2–வது பசுமை புரட்சிக்கான திட்டங்களை முதல்–அமைச்சர் அறிவித்துள்ளார். மேலும் இரு மடங்கு உற்பத்தியை பெருக்கவும், விவசாயிகளுக்கு மூன்று மடங்கு வருமானம் கிடைக்கவும் பசுமை புரட்சி திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொழில்நுட்பங்கள்

விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களை அறிந்து அவற்றை பயன்படுத்தி கூடுதல் உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். மஞ்சள் விலை உயர்ந்தால், அதிகப்படியாக மஞ்சள் உற்பத்தியை செய்து விலை இறங்கும் நிலைக்கும் விவசாயிகள் தள்ளப்படுகிறார்கள். விலைவிவரம் மற்றும் சூழ்நிலைக்கு தகுந்தவாறு விவசாயம் செய்யும் நுணுக்கங்களையும் விவசாயிகள் அறிந்துகொள்ள வேண்டும்.

பல இடங்களில் விவசாய கண்காட்சிகள் நடத்தப்பட்டாலும், விவசாயிகளுக்கு இன்னும் விழிப்புணர்வு ஏற்படவில்லை. எனவே விவசாயிகளுக்கு இன்னும் விழிப்புணர்வு அளிக்கப்பட வேண்டியது உள்ளது. தமிழக அரசு விவசாயிகளுக்கு பல்வேறு மானியங்களை வழங்கி வருகிறது. இதனை பயன்படுத்தி விவசாயிகள் நன்மை அடைய வேண்டும். இவ்வாறு அமைச்சர் தாமோதரன் கூறினார்.

தமிழக வேளாண்மை மற்றும் வேளாண்மை உற்பத்திதுறை செயலாளர் சந்தீப் சக்ஸேனா இந்த விழாவில் பேசும்போது கூறியதாவது:–

சவாலான விவசாயம்

இந்தியாவில் தற்போதைய மக்கள் தொகை 120 கோடிக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. 310 மில்லியன் ஹெக்டேர் நிலத்தில், 160 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் மட்டும் பாசன வசதியில் உள்ளது. நகரமயமாக்கல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் விவசாயம் செய்யும் பரப்பளவு குறைந்துள்ளது. இருந்தாலும் பல்வேறு சிரமங்களை சமாளித்து உணவு உற்பத்தி போதுமான அளவில் உள்ளது. எதிர் வரும் காலங்களில் இந்த உற்பத்தியை மேலும் அதிகரிக்க வேண்டிய நிலை உள்ளது.

தமிழக முதல்–அமைச்சர் 2–வது பசுமை புரட்சி திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருவதால், தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி அதிகரித்து வருகிறது. உற்பத்தி செய்யப்பட்ட உணவை பாதுகாப்பது, சரியான விலைக்கு விற்பனை செய்வது ஆகியவையும் விவசாயிகளுக்கு சவாலாக உள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட உணவு தானியங்களில் 20 முதல் 30 சதவீதம் விரையமாகும் நிலையும் உள்ளது. எனவே பதப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு உணவு பாதுகாப்பு முறைகளை தீவிரப்படுத்த வேண்டும். தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தி சிறப்பாக உள்ளது. இருந்தாலும் விலை ஏற்றத்தாழ்வுகள் விவசாயிகளுக்கு சிரமத்தை அளித்து வருகிறது.

விவசாயம் எந்திரமயமாகி வருவதால், இதனை பயன்படுத்தி விவசாயம் செய்வதிலும், கூடுதல் உற்பத்தியை பெருக்குவதிலும் கவனம் செலுத்த வேண்டும். அரசு சார்பில் விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு தமிழக வேளாண்மை உற்பத்திதுறை செயலாளர் சந்தீப் சக்ஸேனா கூறினார்.

மேயர் செ.ம.வேலுசாமி, வேளாண்மைத்துறை இயக்குனர் எம்.ராஜேந்திரன், கரும்பு ஆராய்ச்சித்துறை இயக்குனர் என்.விஜயன்நாயர், கோவை வேளாண்மை பல்கலைக்கழக தமிழக மீன்வள பல்கலைக்கழக துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன், கால்நடை பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.பிரபாகரன் உள்பட பலரும் பேசினார்கள்.

225 அரங்குகள்

விவசாய கண்காட்சியில் 225 அரங்குகளில் பல்வேறு நிறுவனங்கள் நவீன எந்திரங்கள் மற்றும் விவசாய பொருட்களை பார்வைக்காக வைத்துள்ளன. வேளாண்மை சுற்றுச்சூழல், சந்தை மற்றும் ஏற்றுமதி சேவை, இயற்கை வேளாண்மை, பயிர் பாதுகாப்பியல், நீர்வாழ் உயிரினங்கள், உரம் மற்றும் ரசாயன பொருட்கள், மரபு சாரா எரிசக்தி, கம்ப்யூட்டர் மென்பொருள், பசுமை குடில், மலரியல், சூரிய மின்சக்தியில் மோட்டார்கள் இயங்குவது, கோழிப்பண்ணை, கால்நடை வளர்ப்பு, பால்பண்ணை, உணவு பதப்படுத்துதல் உள்பட பல்வேறு முக்கிய அம்சங்கள் இந்த

கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. இந்த கண்காட்சியில் அமெரிக்கா, ஜப்பான், இஸ்ரேல் உள்ளிட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த விவசாய நிறுவனங்கள், தமிழ்நாடு, மராட்டியம், குஜராத், ராஜஸ்தான், அரியானா, கர்நாடகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த விவசாய நிறுவனங்களும் கண்காட்சியில் அரங்குகளை அமைத்துள்ளன. வருகிற 14–ந்தேதிவரை இந்த கண்காட்சி காலை 9–30 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறுகிறது.

**விவசாயிகளிடமிருந்து பச்சை தேயிலை கொள்முதல் செய்ய கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு 100 சதவீத மானியத்துடன் மின்னணு தராசு புத்திசந்திரன் எம்.எல்.ஏ. தகவல்**

விவசாயிகளிடமிருந்து பச்சை தேயிலை கொள் முதல் செய்ய கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை களுக்கு 100 சதவீத மானி யத்துடன் மின்னணு தராசு வழங்கப்படும் என்று புத்திசந்திரன் எம்.எல்.ஏ. கூறினார்.

<u>குந்தா தேயிலை தொழிற்சாலை</u>

மஞ்சூர் அருகே உள்ள எடக் காட்டில் குந்தா கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை இயங்கி வருகிறது. இந்த தேயிலை தொழிற்சாலையில் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற் பட்ட விவசாயிகள் உறுப்பினர் களாக உள்ளனர். இந்த தேயிலை தொழிற்சாலையின் பொன் விழா தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா தலை மையில் நடைபெற்றது.

இந்த நிலையில், தொழிற் சாலையில் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளுக்கு லாபத் தில் பங்கு தொகை (டிவி டென்ட்) வழங்க தொழிற் சாலை நிர்வாகம் தரப்பில் நட வடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கான விழா குந்தா கூட்டு றவு தேயிலை தொழிற்சாலை வளாகத்தில் நடைபெற்றது.

<u>பங்கு தொகை</u>

இந்த விழாவுக்கு தொழிற் சாலை நிர்வாக குழு தலைவர் சகாதேவன் தலைமை தாங்கி னார். இதில், இன்ட்கோ சர்வ் தலைவர் சிவக்குமார், இணை இயக்குனர் சாமிநாதன், பிக் கட்டி பேரூராட்சி தலைவர் ஜெயமணி ஆகியோர் முன் னிலை வகித்தனர். முன்னதாக ஊட்டி எம்.எல்.ஏ. புத்தி சந்தி ரன் தொழிற்சாலை உறுப்பினர் களுக்கு லாபத்தில் பங்கு தொகையான ரூ.5 லட்சத்தை வழங்கினார்.

பின்னர் அவர் பேசும்போது கூறியதாவது: கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் தற்போது விவசாயிகளிட மிருந்து பச்சை தேயிலை கொள்முதல் செய்ய வில் தராசு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில், பல்வேறு குளறுபடி இருப்பதாக உறுப்பினர்கள் புகார் தெரிவித்து உள்ளனர்.

<u>100 சதவீத மானியத்தில் மின்னணு தராசு</u>

இதையடுத்து, தமிழக அரசு சார்பில் முதற்கட்டமாக குந்தா (எடக்காடு), மஞ்சூர், மகாலிங்கா, பிக்கட்டி, கிண்ணக் கொரை, மேற்குநாடு, இத்த லார் ஆகிய தேயிலை தொழிற்சாலையில் 100 சதவீத மானியத்தில் மின்னணு தராசு வழங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். இந்த விழாவில், குந்தா கூட்டுறவு நிர்வாக குழு உறுப்பி னர்கள் ராதா கிருஷ்ணன்,ரவி, நாகராஜ், விஜயா, கோகிலா உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முன்ன தாக அபிமன்யு வரவேற்றார். முடிவில் நிர்வாக குழு இயக்கு னர் தர்மராஜ் நன்றி கூறி னார்.

**விவசாயிகள் யூரியா உரத்தினை தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டும் கலெக்டர் நடராசன் அறிக்கை**

யூரியா உரத்தினை தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டும் என்று கலெக்டர் நடராசன் கூறினார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

**வட்டியில்லா முன்பணம்**

தற்போது விவசாயிகளால் குறுவை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விவசாயத்திற்கு தேவையான முக்கிய இடுபொருளான உரங்கள் தாராளமாக கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் தமிழக அரசு ரூ.150 கோடி டான்பெட் நிறுவனத்திற்கு வட்டியில்லா முன்பணம் வழங்கியுள்ளது.

இதனை கொண்டு டான்பெட் நிறுவனம் டி.ஏ.பி. உரத்தினை கொள்முதல் செய்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் விற்பனை செய்துவருகிறது. இது தவிர தமிழக அரசு உரங்களின் மீதான 4 சதவீத மதிப்பு கூட்டப்பட்ட வரியிலிருந்து விளக்களித்துள்ளது. இதன் மூலம் 50 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூ.11 முதல் ரூ.52 வரை உரங்களின் விலை குறைந்துள்ளது.

**யூரியா உரம்**

தற்போது யூரியா உரங்கள் மட்டுமே மிகக்குறைந்த விலையில் கிடைக்கிறது. எனவே விவசாயிகள் அதிக அளவில் யூரியா உரத்தினை மட்டுமே வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள். யூரியா போன்ற தழைச்சத்தை அளிக்கக்கூடிய உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவினைவிட அதிக அளவில் பயன்படுத்தினால் பயிற்களின் வளர்ச்சி அதிகரித்து, பூச்சிநோய் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும். இதனால் மகசூல் குறைய வாய்ப்புள்ளது.

**பரிந்துரையின்படி உரங்களை...**

விவசாயிகளின் ஒருங்கிணைந்த கையேட்டில் உள்ள மண்வள பரிசோதனையின் அடிப்படையில் அல்லது பொது பரிந்துரையின்படி உரங்களை இட விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். யூரியாவுடன் மணி மற்றும் சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களையும் தவறாமல் விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்.

மேலும் விவசாயிகளிடையே சிறிய அளவிலான யூரியா உரங்கள் அதிக பலனை தரக்கூடியது என்ற தவறான எண்ணம் நிலவி வருகிறது. குருணை வடிவிலான யூரியா மற்றும் சிறிய அளவிளான யூரியா இரண்டிலும் தழைச்சத்து 46 சதவீதம்தான் உள்ளது. எனவே யூரியா எந்த வடிவில் இருந்தாலும் எவ்வித சந்தேகமும் இன்றி யூரியா உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவில் மட்டுமே இட்டு பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் உரங்களை வாங்கும்போது தவறாமல் ரசீது கேட்டு பெறவும், மூட்டையில் உள்ள விலையினை சரிபார்த்து வாங்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.